www.tamilarangam.net


# களத்தில்

மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்

(12.08. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (167) அன்பளிப்பு: 60 p




தமிழ் மண்ணில் பசுமை நிலைத்திட சுடும் வெய்யில் குளிக்கும் சிறுத்தைகள்

## மரணக்குழிகளைத் தோண்டி விசாரணை நடத்த சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

சிறிலங்கா அரசின் பாதுகாப்புப் படையினரால் இனக்கொலை செய்யப்பட்ட நானூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிருடனும் உயிரின்றியும் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் செம்மணிப் புதைகுழிகளை அகழ்ந்து ஆராய்ந்து உண்மை நிலைகளை உலகுக்கு உரைக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா அரசைக் கோரியுள்ளது.

'இனஅழிப்பு' தொடர்பான இவ்விடயம் சர்வதேசச் சட்டங்களை சிறிலங்கா மீறி வருவதற்கான முழுமுதல் அத்தாட்சியாக உள்ளது. அதனால் இவ்விடயத்தை இருட்டடிப்புச் செய்வதற்காக இது தொடர்பான விசாரணைகளை சிறிலங்கா இழுத்தடித்து வருகின்றது. ஆயினும், இந்தச் செம்மணி மரணக்குழிகள் குறித்து உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள் கொடுத்துவரும் அழுத்தங்கள் சிறிலங்காவைத் திணறடித்து வருகின்றது.

இதனால் இவ்விடயத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடியவகையில் தனது இரகசிய பொலிசாரைக் கொண்டு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சிறிலங்கா முயற்சியில் இறங்கியுள்ளது.

ஆயினும், சம்பந்தப்பட்ட

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

# புதிய விமானங்களுடன் மற்றொரு பாரிய போர்

## ★ சிறிலங்காப் படைகளும் ஜனாதிபதியும் இதற்கான ஆயத்தங்களில் இறங்கி விட்டனர்

தமிழ் மக்கள் மீதான மற்றொரு பாரிய போரிற்கு சிறிலங்காப் படைகளும் அதன் ஜனாதிபதி சந்திரிகாவும் அதற்கான முன்னெற்பாட்டு முயற்சிகளில் இறங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் செயலாளர் பாலபட்டபெந்தி, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா ஆகியோர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று, ரஸ்யாவுக்கு விஜயம் செய்து எம்.ஜ.35 ரகச் சண்டை உலங்கு வானூர்திகள் மூன்றை கொள்வனவு செய்ததை அடுத்து சிறிலங்காவிடம் உள்ள மூன்று எம்.ஐ. 24 ரக உலங்கு வானூர்திகளுடன் சேர்த்து சிறிலங்காவின் உலங்கு வானூர்திகளின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

இதேவேளை 40,000 சிறிலங்காப் படையினர் தமிழ் மக்கள் மீது தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கான உச்ச நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா ஐக்கிய முன்னணி அரசுக்குள் உருவாகியுள்ள உட்பூசல்களை திசை திருப்ப தமிழ்மக்கள் மீதான பாரிய போர்ப் பிரகடனம் உத்தியாகக் கையாளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை செயற்படுத்துவதற்கான மற்றொரு முன்னெடுப்பாகவே தீவு முழுவதும் மீண்டும் அவசரகால நிலையினை, சிறிலங்காவின் அதி உத்தம ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். மேலும் இதனை நியாயப்படுத்தக் கூடிய

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....

## தமிழ் மக்கள் தம் தாயகத்தில் அடிமைகளாக வதைக்கப்படும் கொடுமை

தமிழ் மக்களை அவர்கள் தாயகத்திலேயே அடிமைகளாக கட்டாய வேலைகள் வாங்கும் சிறிலங்காவின் திட்டம் தற்போது யாழ். குடாநாட்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள சிங்கள அதிரடிப் படையினர், பொது மக்களை ஆண்கள், பெண்கள், மாணவர்களெனக் கூட்டம் கூட்டமாக இழுத்துச் சென்று அடித்து உதைத்து சித்திரவதைப் படுத்தி உணவு குடிநீர் வழங்காது கட்டாய வேலை வாங்குகின்றனர்.

சிங்கள முகாம்களின் மலசல கூடங்களைத் துப்பரவு செய்வது, மண் மூட்டைகளை சுமப்பது, சமையல் வேலைகளில் ஈடுபடுத்துவது, பதுங்கு குழிகள் வெட்டுவிப்பது போன்ற பல்வேறு உடற் கஸ்டமான வேலைகள் தமிழ் மக்களைக் கொண்டு கூலி ஏதுமின்றி செய்விக்கப்படுகிறது. இந்தக் கட்டாய வேலை வாங்கலுக்கு தப்பிக்க நினைக்கும் மக்கள் பலத்த கொடுமைகளுக்கும் காரணமில்லாக் கைதுகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர். ★

## தரைநகர்வுக்கு ஆயத்தமாக இருந்த 'ஜெயசிக்குறுய்' படையணி மேல் தாக்குதல்

★ ஒரு கிலோ மீற்றர் நீள இராணுவ வேலிதகர்ப்பு

★ 30 படையினர் பலி

★ 14 போராளிகள் வீரச்சாவு

இம் மாதம் 2ஆம் திகதி நள்ளிரவு 11.30 மணியளவில் மூன்று முறிப்புப் பகுதியில் தரைநகர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த 'ஜெயசிக்குறுய்' படையணி மேல் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். மறுநாள் 3ஆம் திகதி காலை 10 மணி வரை நீடித்த சண்டையில் ஒரு கிலோ மீற்றர் நீளமான இராணுவ வேலி தகர்க்கப்பட்டு இப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இவ் வெற்றிகரத் தாக்குதலில்

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net




எங்கள் தாயகத்தை–எழில் மிகு தமிழீழத் தேசத்தை–அங்கு வாழ்ந்திடும் எங்கள் சொந்தங்களை, உறவுகளை, உற்ற நண்பர்களை எண்ணிப்பாருங்கள். இருக்க இடமின்றி தவிக்கின்றனர். உண்ண உணவு இன்றித் துடிக்கின்றனர். நோய்க்கு மருந்து வழங்காத பாழ்பட்ட அந்நிய அரசொன்றில் வதைக்கப்படுகின்றனர். பள்ளிக்குச் செல்லும் மாணவி முதல் எம் தாயை ஒத்த சகோதரிகள் வரை பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கி எங்கள் இனமான நரம்புகளுக்கு உணர்வுண்டா எனச் சிங்களப் படையினர் சுண்டிப் பார்க்கின்றனர். தாம் சுட்டுக் குவிக்கவும் குண்டடித்துக் கொல்லவும் நினைத்தபடி துப்பாக்கி முனையில் ஆட்டிப்படைக்கவும் படைக்கப்பட்ட ஒரு சமுதாயமாக எங்கள் தமிழீழச் சமுதாயத்தை சந்திரிகா – ரத்வத்தை குடும்பத்தினர் நினைத்து நெருப்புடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

மக்களை மட்டுமா? எங்கள் தாயக மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் அழித்து எங்கள் தேசத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைக்கும் ஈனச்செயலில் இறங்கி நிற்கிறார் சந்திரிகா. கும்பிட்ட கோவில்களும் தமிழர் கோவில்கள் என்பதற்காய் குண்டுகளால் குளிப்பாட்டப்பட்டு கற்குவியல்களாக காட்சியளிக்கின்றன. படித்த பள்ளிகள் இடித்து தள்ளப்பட்டு இழுத்து மூடப்பட்டு கிடக்கின்றன. இப்படி எத்தனையோ எத்தனையோ கொடுமைகள் ஆக்கிரமிப்பு சிறிலங்காவினால் அனுதினம் நடாத்தப்பட்டு வருகிறது.

இத்தனை செய்தும் தளரா உறுதியுடன் தாயக விடுதலைக்காக நெருப்பில் குளித்தெழும் வீரமக்களாக எங்கள் சொந்தங்கள் அங்கே காட்சியளிக்கின்றனர். ஓங்கியெழுந்து விடுதலைப்புலிகளாய் அவர்களடிக் கையிலே சிங்களப்படைகள் சின்னாபின்னமாகி சிதறும் காட்சிகள் வரலாறு ஆகின்றன. அடக்க நினைத்தவனை ஆட்டிப்படைக்கிறது புலிப்படை. ஒடுக்க நினைத்தவன் புலி என்றதுமே ஒடுங்கி நடுங்குகிறான் கிலியாலே. ஆப்பிழுத்த குரங்காய் ரத்வத்தை. ஆழம் தெரியாமல் காலை விட்ட கதையாக சந்திரிகா கதை.

கிடுகிடுவென்று சரிகிறது பொருளாதாரம். அதற்கு முண்டு கொடுக்க உலகெல்லாம் கடன் கோரிக்கை. கைக்கு வந்ததும் மீளவும் ஆயுதம் வாங்கும் பயணங்கள். கொடுத்தவனிடமே ஆயுதத்திற்காய் பெற்றதைக் கொடுத்து விட்டு வட்டியைப் பெருக்கி வாங்கியவற்றையும் களத்தில் இலவசமாக விடுதலைப் புலிகளிடம் விட்டுச் செல்லும் வரலாறு. அதனை மூடிமறைக்க பத்திரிகைச் சுதந்திரத்தின் மென்னியைத் திருகும் தொழில். பாதை திறக்கப் புறப்பட்டு அரசியல் துறவறத்திற்கு பாதை திறக்கப்பட்டு விட்டதைக் கண்ட சந்திரிகா குடும்பம் அதற்குள் இறங்குவதை தவிர்க்க தீவு முழுவதும் அவசரகால சட்டம் போட்டு தேர்தல்களை ஒத்தி வைக்கும் வேடிக்கைகள். இவ்வாறு கேளிக்கைகளில் ஆட்சியாளர்கள் திளைக்க– களத்தில் கால்நடுங்க கைநடுங்க எப்பொழுது விடுதலைப் புலிகளிடம் உயிரைக் கொடுப்போம் என– வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து – சிங்கள இராணுவமாய் உழைக்க வந்து உயிர் பிழைக்கப் போராடும் சிங்களப் படைகள்.

ஆனாலும், சிங்கள அரசாங்கம் அதனது படைகளுக்கு இவ்வளவு இழப்புகள் ஏற்பட்ட போதிலும் புதிய புதிய முயற்சிகளுடாகப் போரை முன்னெடுப்பதிலேயே முழுமூச்சுடன் இயங்குகிறது. இதற்கு காரணம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இன்மையைத் தோற்றுவித்தல் என்னும் சிங்கள அரசின் பேரினவாதக் கொள்ளையே ஆகும். தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தாக்குவதினால் அவர்கள் மனோபலத்தில் சோர்வுகளை ஏற்படுத்துதல், அவர்களது தேச உட்கட்டுமானங்களை படிப்படியாகவும் பெரிய அளவிலும் அழிப்பதினால் அவர்களது போராட்ட சக்திக்கான பொருளாதாரப்



## மக்களைப் பாதுகாப்பதே தீர்வு

பலத்தை தகர்த்து விடுதல், தமது சிங்களவர்கள் அழிந்தாலும் சிங்கள சனத்தொகை தமிழர்களின் சனத்தொகையை விட அதிகம் என்ற புள்ளிவிபரத் திட்டமிடலின்படி அது ஈடுசெய்யப்படலாம் என்கிற அசட்டுத் தைரியத்துடன் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இன்மைகள் தொடர்வதற்கு தனது படைகளை பெரும் அழிவுகளுக்கு மத்தியிலும் யுத்தத்தில் தொடர்ந்து சிறிலங்கா ஈடுபடுத்துகிறது. தற்பொழுதும் 40,000 படையணியினரை புதிதாக வாங்கிய ஆயுதங்கள் உபகரணங்களுடன் எமது மக்களை குறிபார்த்து நிலை எடுக்கச் செய்து விட்டு உதட்டளவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் குறித்து ஏதேதோ பேட்டிகள் கொடுக்கின்றார் சந்திரிகா.

இதன் மூலம் தற்பொழுது மனித உரிமைகளின் கூட்டு மொத்தமான மீறல்களாலும், மனிதப் படு கொலைகளாலும் தமிழர்களின் அந்நிய அரசாக தனது அரசை உலகு கருத முற்படுவதை திசைமாற்றலாமெனச் சந்திரிகா மற்றொரு அரசியல் சதியை ஆரம்பித்துள்ளார். இந்தச் சதியின் வளர்ச்சிக் கட்டமாக மீண்டும் மற்றொரு பாரிய யுத்தத்தை தமிழ் மக்கள் மேல் சந்திரிகா ஏவி தனது இராணுவ அரசியல் தோல்விகளைத் திசை திருப்புவார்.

இந்நேரத்தில் உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் சந்திரிகா அரசின் சுயத்தை மேலும் மேலும் தோலுரித்துக் காட்ட வேண்டியது புலம்பெயப் தமிழர்களாகிய நமது பொறுப்பு. பயங்கரவாதம் எனத் தமிழர்களின் உயிர்வாழ்தலுக்கான ஆயுத எதிர்ப்பை பிரச்சாரப்படுத்த முயன்று தோல்வி கண்ட நிலையில் கதிர்காமர் சிறுவர் படை என்ற புதிய ஒரு பிரச்சாரத்தில் வேகமாகச் செயற்பட்டுவருகின்றார். ஆனால், அவரது சிறிலங்கா அரசாங்கம் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு கண்ணி வெடிகளை பயன்படுத்த வேண்டுமென சர்வதேச மட்டத்தில் கேட்டுவரும் உலகின் நாடுகளில் ஒன்று என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதனை ஒஸ்லோவிலிருந்து வெளிவரும் உலக ஆயுதநிலைகள் பற்றிய புள்ளிவிபர ஏடு 551ம் பக்கத்தில் தெளிவாக்கியுள்ளது. இந்த கண்ணிவெடிகளினாலேயே ஆயிரக்கணக்கான தமிழ்ச் சிறுவர்கள் உயிரிழப்புக்கள் உடல் பாதிப்புக்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது ஊரறிந்த உண்மை. அது மட்டுமல்ல அதே சர்வதேச ஏடு சமாதானம் ஏற்படுத்துவதாக கூறி ஆட்சியமைத்த சந்திரிகா ஆட்சி அமைக்கும் பொழுது இராணுவத்திற்கு செலவிட்டதை விட நாலு மடங்குக்கும் மேலாக சந்திரிகா தனது அரசில் இராணுவச் செலவுகளுக்கு செலவிடும் புள்ளிவிபரத்தையும் வெளியிட்டுள்ளது. இது தமிழ் மக்களை மேலும் மேலும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளுவதற்கு சிறிலங்கா எடுக்கும் முயற்சிகளுக்கு சிறந்த அத்தாட்சியாக உள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கான அவர்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவது ஒன்றே தமிழ் மக்களுக்கு உடனடித் தேவையாக உள்ள பாதுகாப்பு அவர்களுக்கு கிட்டச் செய்வதற்கான ஒரே வழி. இந்தப் பாதுகாப்புக்கு ஏற்படுத்தப்படும் உத்தரவாதத்தைப் பொறுத்தே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தங்கியுள்ளது. மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள படைகள் விலகினாலே அங்கு தீர்வு குறித்த எந்த முயற்சியும் சாத்தியமாகும் என்ற உண்மையை சர்வதேச மக்கள் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி இதற்கான அழுத்தங்களை அவர்கள் சர்வதேச நாடுகள் அமைப்புக்களிடம் ஏற்படுத்தும்படி வற்புறுத்தல் அவசியம். இப்படி நாம், நாம் வாழும் நாடுகளில் உள்ள பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம் கேட்கும் பொழுது, அவர்கள் இது தொடர்பாக தாம் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ள தமது விருப்புக்களை தெரிவிப்பது வழமை. இந்நேரத்தில் அவர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியாக அங்கீகரிப்பதன் மூலம் இதற்கான நேரடிவசதிகள் தோன்றி தமிழ் மக்களின் உண்மையான பிரநிதித்துவத்தன்மையினை உலகு இனங்கண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு விரைவுபெற இது வழிவகுக்குமென வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் தமிழ் மக்களின் பாதுகாப்பினை அழித்தொழித்து சர்வதேச சட்டங்களை மீறும் சிறிலங்காவுக்கான ஆயுத உதவிகள் இராணுவப்பயிற்சிகள் நிதி உதவிகள் அனைத்துமே இனஅழிப்பொன்றுக்கான உதவியாகவே மாறுகிறது என்பது நடைமுறை யதார்த்தமாக உள்ளது.

இதனை மனதிருத்தி சர்வதேச நாடுகள் இத்தகைய வழிமுறைகளை மாற்றியமைத்து தமிழ் மக்களின் பாதுகாப்பு பலப்பட உதவவேண்டுமென்பதே புலம்பெயர் தமிழர்களின் ஏகோபித்த வேண்டுகோள். ★

## மரணக்குழிகளை......

தடயங்களை அழித்து விசாரணைகளை அர்த்தமற்றதாக்கும் பணிகளே சிறிலங்காவால் அங்கு மேற்கொள்ளப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து கடந்த வாரம் மனித உரிமை ஆணைக்குழு பகிரங்கமாகவே, புதைகுழித் தடயங்களைச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அழித்துவிட முயற்சிப்பதாக அறிவித்து ள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய வகையில் செம்மணி மரணக்குழிகள் அமைந்திரு க்கும் இடத்தை ஊடுருவிச் செல்லும் கைதடி நல்லூர் வீதியை சிறிலங்கா இராணுவம் மூடிவிட்டது. இதனால் மரணக்குழிகள் அமைந்துள்ளதாகக் கூறப்படும் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தடய அழிப்புக்கள் யாருக்குமே தெரியாதவாறு பேணப்பட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ★

## தரைநகர்வுக்கு ஆயத்தமாக......

முப்பது சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது. பெருந்தொகை இராணுவ ஆயுதங்களையும் தளபாடங்களையும் கைவிட்டு இராணுவம் பின்வாங்கிச் சென்றதை அடுத்து, அவ் ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் வசமாகின. இத் தாக்குதலில் தாயக விடுத்லைக்காய் 14 விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவெய்தினர்.

விடுதலைப் புலிகள், நிலைகொண்டுள்ள இராணுவத்தின் மீது தாக்குதல் தொடுத்து அழிக்கத் தொடங்கியுள்ளமை சிறிலங்காப் படையினருக்கு மனோநிலை அச்சத்தையும் சிறிலங்கா அரசிற்கு அதிருப்தியையும் அளித்துள்ளதாகவும் இதனால் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை மேலும் பின்தள்ளப்பட்டுள்ளதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். ★

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25
3rd Floor
16362 Spanga

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓரங்கட்டப்படும் நாயகர்கள் போவது எங்கே?

'அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது. நிரந்தர எதிரிகளும் கிடையாது' என்ற கூற்றுக்கு அமைவாக சிறிலங்கா அரசியலில் சில



ஏ.சி.எஸ்.கமீட்

நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களான அநுரா பண்டார நாயக்கா, ஏ.சி.எஸ்.கமிட் ஆகியோர் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி பக்கம் சாயப் போகிறார்களா? என்ற ஊகத்தினை உறுதி செய்வது போல ஐக்கிய தேசியக் கட்சியில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஐ.தே.க.வின் செயற்குழுவின் முடிவின்படி ஹமிட், அநுரா ஆகியோர் உட்பட எட்டு உறுப்பினர்கள் ஐ.தே.க. வேட்பாளர்களை நியமிக்கும் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந் நடவடிக்கையானது கொழும்பு அரசியலில் ஒரு காத்திரமான சலசலப்பையும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு அரசியல் தீனியையும் வழங்கியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் அறிவிப்புகள் வெளிவந்திருந்த வேளையில் ஐ.தே.கட்சி ஏன் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுத்தது? கட்சியிலிருந்து இவர்கள் வெளியேற்றப்படுவதற்கு இது ஒரு ஆரம்ப நடவடிக்கையா? என்ற கேள்வி ஆய்வுக்குரிய ஒன்றாகவும் கிளம்பியுள்ளது. முன்னர் ஐ.தே.க.வின் தலைவராகவும், பிரபலமிக்க ஒரு வெளிநாட்டு அமைச்சராகவும், விடுதலைப் புலிகள் - ஐ.தே.க. பேச்சுவார்த்தைக் காலத்தில் ஒரு தூதுவராகவும் பணியாற்றிய ஹமிட் தற்போது கட்சியிலிருந்து ஓரங் கட்டப்படுவது கட்சிக்குள் தோன்றக் கூடிய பிளவு ஒன்றினையே சுட்டிக் காட்டுகின்றது.

எப்படியாவது மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக ஐ.தே.க.வினை ஊழலற்ற தூயகட்சி எனவும், வழுவழுப்பான உறவுகொண்டோர் கட்சியிலிருந்து அகற்றப்பட்டு விட்டார்கள் என்பதையும் தனது வாக்கு வங்கிக்குக் காட்டுவதற்கு ரணில் குழுவினர் பெரும் பிரயத்தனம் எடுப்பதன் விளைவே இச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் என்பதும் மறுக்கப்படக் கூடியதல்ல. ஆனால் மறுபுறத்தே ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் வைக்கப்பட்டுள்ள அரசியல் பொறி ஒன்றிலேயே இவர்கள் சிக்கிக் கொண்டுள்ளார்களா? என்பதை நோக்கினால்கூட தெளிவான முடிவினை பெறமுடியாமல் உள்ளது. ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அநுரா மீண்டும் இணைந்து கொள்வாரா, அமைச்சரவையில் அவருக்கு இடம் கிடைக்குமா என்ற கேள்விகளை செய்தியாளர்கள் சந்திரிகாவிடம் கேட்ட பொழுது அவர் அதற்கு தெளிவான பதிலை வழங்காது நழுவிச் சென்றுள்ளார்.

இந்த வேளையில் பொதுஜன ஐக்கிய முன்னணி இடையே நடைபெற்ற அரசியல் கட்சிகள் சிலவற்றை நோக்கினால், சந்திரிகாவின் பிறந்தநாள் கொண்டாட்ட கலகலப்புகள் கொழும்புப் பத்திரிகைகளுக்கு சில சுவாரசியமான விடயங்களை வழங்கியிருந்தன. தனது 53வது பிறந்த நாளைக் கொண்டாடிய சந்திரிகா அவ்விழாவினை தனது தாயார், சகோதரி சுனேத்திரா, தனக்கு நெருங்கிய மூன்று அமைச்சர்கள் உட்பட சில பிரமுகர்களுடனேயே கொண்டாடியிருந்தார். வருகைதந்திருந்த பிரமுகர்களிடையே சந்திரிகாவின் செய்தித் தொடர்பு ஆலோசகர் சனத் குணதிலகவும் ஒருவராவர். சந்திரிகாவின் தனிப்பட்ட வாழ்வில் சனத் குணதிலகவின் நெருக்கம்பற்றி கொழும்புப் பத்திரிகைகள் எப்பொழுதுமே ஒரு பிடி வைத்து செய்திகளைத் தருவதுதான் வழக்கம்.

இம்முறை அப்படி மேலும் இறுகியுள்ளது. சந்திரிகாவின் பிறந்த நாளுக்காக சனத் குணதிலகா பிறிதொரு விருந்தினை ஒழங்கு செய்திருந்தார். அவ்விழாவுக்கு சந்திரிகா வருவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் விருந்து களைகட்டிக் கொண்டிருந்தவேளையில் திடீரென சந்திரிகா வருகை தந்து விருந்தில் பங்கெடுத்துக் கொண்டார். நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் சந்திரிகாவை எல்லோரும் வாழ்த்தியபோது சனத் குணதிலகா சந்திரிகாவின் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்துத் தெரிவித்தபோது கூட்டத்தின் விழிகள் அகலத் திறந்தன. நிலைமையைச் சமாளிக்க அரச படப்பிடிப்பாளர் முந்திக்கொண்டு சனாதிபதியை அரச ஊழியர்கள் இவ்விதம் வாழ்த்துவது தவறல்ல எனக்கூறி அச்சம்பவத்தை சாதாரணமாக்கிவிட்டார்.

பிறந்தநாள் கொண்டாட்டங்களை தொடர்ந்து மீண்டும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான விவாதங்கள், அலசல்கள், சட்டப் புத்தகப் புரட்டல்கள் எல்லாவற்றிலும் அரச தரப்பு ஈடுபட்டது. வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டபின் அவசரகால சட்ட விதிகளின்படி தேர்தலை பின்போட வேண்டும் என்ற வாதம் அரசிடையெ வலுத்துவருகிறது. (தற்போது இதுபோலவே திகதி குறிப்பிடாத நாள் ஒன்றிற்கு மாகாணசபைத் தேர்தல்களை சந்திரிகா ஒத்தி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.) ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவோ தேர்தலும் வேண்டாம் வேட்பு மனுவும் வேண்டாம் என்ற நிலையிலேயே தொடர்ந்தும் இறுக்கமாக உள்ளார். தேர்தல் வந்தால் வாக்குச் சாவடி ஒவ்வொன்றிற்கும் தலா இரண்டு பொலிசார் வீதம் 5937 வாக்குச் சாவடிகளுக்கும் பாதுகாப்பு வழங்க பொலிசாருக்கு நான் எங்கே போவேன் என ரத்வத்த கூற, சந்திரிகாவுக்கும் ரத்வத்தவுக்கும் இடையே வாதப் , பிரதிவாதங்கள் எழுந்தன.

வேட்புமனுக்களை ஏற்காது தேர்தலை பின்போடுமாறு ரத்வத்த அழுத்தமாகக் கூற, அதனை மறுதலித்த சந்திரிகா வேண்டுமானால் வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டபின் தேர்தலை தள்ளிப் போட முடிவு செய்யலாம் எனக்கூற விவாதம் சூடானது. இருவரின் விவாதங்களையும் அமைச்சர்கள் கவனமாக செவிமடுத்துக் கொண்டிருந்தனர். பேராசிரியர் பீரிஸ் இவர்களுக்கு இடையில் புகுந்து நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர பெரும் பிரயத்தனப்பட்டார். இக் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் ஒருவர் இரண்டு எரிமலைகள் வெடித்துச் சீறின



ரணில் விக்கிரமசிங்க

என வர்ணித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்துவதில் பெரும் சட்டப் பிரச்சினைகளை அரசு நோக்குவதற்கு காரணம் இல்லாமலில்லை. ஏனெனில் மாகாண சபை அரசியலமைப்பு சட்டமானது. ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தின் மூலமாக மாற்றியமைக்கப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக கொண்டுவரப்பட்டதாகும். எனவே மாகாணசபைத் தேர்தலை அரசியலமைப்பு சட்டவிதிகளின் கீழ் நடத்த முடியாது.

மாறாக மாகாணசபைத் தேர்தல் சட்டவிதிகளினூடாகவே நடாத்த முடியும். எனவே இந்தத் தேர்தல் விதியில் அவசரகால சட்ட விதிகளுக்கு அமைய தேர்தலை தள்ளிப்போட அனுமதி இருப்பதால் அரசு அதனை ஒரு துரும்பாக இன்று பெரிதும் நம்பியுள்ளது.

இந்த நம்பிக்கையை ஐ.தே.க.வினர் எவ்வளவுதூரம் சிதைப்பார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (ஆயினும் சந்திரிகா இவ்வாறே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி மாகாண சபைத் தேர்தலைப் பின்போட்டுள்ளார்)

நன்றி: 'உலகத் தமிழர்'







சந்திரிக்கா குமாரதுங்க — சுனித்திரா நாணயக்கார — அநுரா பண்டாரநாயக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதிய விமானங்களுடன்.......

வகைதொகையற்ற எண்ணிக்கையில் தமிழர்கள் கைதாக்கப்படுவது அதிகரித்துள்ளது. இதனை நியாயப் படுத்த கரும்புலிகள் அணியும் ஆடை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பல்வேறு புரளிகளைச் சிறிலங்கா கட்ட விழ்த்துவிட்டு வருகிறது.

### இருநாடுகளுக்கு இடையிலான போர்

இதற்கிடையில், செய்தி தணிக்கை நீடிப்புத் தொடர்பாக பத்திரிகை யாளரிடையே பேசிய சிறிலங்கா ஜனாதிபதி, 2ம் உலகப் போர் நேரத்தில் பிரித்தானியப் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் எடுத்த நடவடிக்கைகளையும் தனது நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு நியாயப் படுத்தியுள்ளார். இதன் மூலம் தானும் நாடுகளுக்கு இடையிலான போரையே நடத்துகிறார் என்ற உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார். தமிழீழ மக்களின் பிரச்சினை, சிறுபான்மை – பெரும்பான்மை இனங்களுக்கு இடையிலான பிரச்சினையல்ல. இரு வெவ்வேறு இறைமையுடன் திகழ்ந்த இரு நாடுகளை காலனித்துவம் இணைத்ததினால் ஏற்பட்ட காலனித்துவ பிரச்சினை, நவகாலனித்துவமாக மாறி இன்று சிறிலங்கா, தமிழீழம் என்னும் இரு தேசங்களுக்கிடையிலான போராக விரிவடைந்துள்ளது. இதில் காலனித்துவம் வழங்கிய இலங்கைத் தீவின் அரசு என்ற சட்டபூர்வ நிலையைப் பயன்படுத்தி, சிறிலங்கா தமிழீழ மக்களை இனஅழிப்பு செய்து பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முயல்கின்றது. ஆதலால் சர்வதேச அமைப்புக்கள் இதில் தலையிட்டு பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களின் ஒரே அரசியல் தலைமையாகவும் தமிழீழத் தேசத்தின் ஒரே தேசிய பாதுகாப்புக்கான அமைப்பாகவும் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பாதிக்கப்பட்ட தமிழீழ மக்கள் சார்பாக அங்கீகரித்து, பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட வழிவகுக்க வேண்டுமென்ற நடைமுறைச் சாத்தியமான கருத்து, இறைமை மீறலாக அமையாது என்பதற்கு சந்திரிகாவின் கருத்து சான்றாக உள்ளது.

### பாரிய போருக்கான கருத்து நிலை ஆயத்தம்

சந்திரிகா எப்பொழுது எப்பொழுதெல்லாம் பேச்சுவார்த்தை என்ற சொல்லை உச்சரிக்கின்றாரோ அப்பொழுது தமிழ் மக்கள் மீதான பாரிய போர் ஒன்றை முன்னெடுப்பதற்கான அறிகுறியாக அது கொள்ளப்பட வேண்டும் என்பதை இலங்கைத் தீவின் சமகால வரலாற்றை அறிந்தவர்கள் புரிந்து கொள்வர். தற்பொழுது செம்மணிப் புதைகுழிகளால் 'சிறிலங்கா தமிழீழ மக்களுக்கான பாதுகாப்பை அமைதியை வழங்க ஆற்றல் அற்ற அரசு' என்பது உலகளாவிய நிலையில் மேலும் உறுதியாகி வருவதை அடுத்து, தமிழீழ மக்களின் சார்பாக ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு ஏற்பட்டு வருவதை **மாற்றியமைக்க,** தான் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணி, அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண விழையும் அரசாகத் தன்னை உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கில், சந்திரிகா 'நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தை' என்ற தனது பழைய பல்லவியை மீளவும் உலகுக்கு ஒலிபரப்பத் தொடங்கியுள்ளார். சிறிது காலம் இந்த மகுடியை வாசித்த பின், இதற்கு விடுதலைப் புலிகள் இணங்குகின்றார்கள் இல்லை – ஆகவே அவர்களை அழித்து தமிழரைக் காக்க போர்ப் பிரகடனம் செய்கிறேன் எனத் தன் ஆக்கிரமிப்புப் போரைத் தொடர, உலக நாடுகளின் ஆசிகளை கோருவதற்கே இந்த நாடகம். உலக நாடுகளும் 'உதவி' என்ற பெயரில் நிதியை அளித்து, ஆயுத விற்பனை என்ற பெயரில் திரும்பவும் அதனைத் தம் நாடுகளுக்குள்ளேயே மீளப் பெற்று, இலங்கைத் தீவின் படுகடன் அளவை மட்டும் பெருக வைத்து, அதனைத் தங்கள் இராணுவ சந்தை நலன்களுக்கு ஏற்ப பயன்படுத்த சந்திரிகா அம்மையாரின் போர்வெறிக்குத் தீனி போடத் தவறமாட்டார்கள். இதனால் தமிழீழ மக்களின் உயிர் உடல் உடைமைகளுக்கு ஏற்படும் பாதிப்புக் களைத் தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்விடயம் குறித்து உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய தருணம் இது.

### மக்களின் பாதுகாப்பே இன்றையப் பிரச்சினை

சிறிலங்காவின் அடுத்த பிரதமராவதற்கான பதவிப் போட்டியில் கூட, தமிழ் மக்களை அழித்தலே அதற்கான தகுதி என மகாநாயக்க தேரோக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. ரத்வத்த, அக்காவுக்குப் பின் அடுத்த பிரதமராகத் தான் ஏறிக் குந்தலாமென மனப்பால் குடிக்க, அக்காவும் மருமகளும் வேறு சிந்தனைகளில் தங்கள் குடும்பச் சொத்தாகவே தேசத்தை வைத்திருக்க நினைக்க, இறுதியில் ரத்வத்த எந்த பௌத்த – சிங்கள பேரினவாதத்திற்கு தான் தமிழர் உயிர்களைத் தீனி போடுகின்றாரோ, அதே பௌத்த மகாநாயக்கர்களிடம் ஓடிச் சென்று, என் பெயரை பிரதமர் பதவிக்கு உச்சரியுங்கள் என விழுந்து வணங்கியுள்ளார். மல்வத்தை மகாநாயக்க தேரோவும் அவரையே பிரதமராக்கும் படி ஆணை பிறப்பித்ததும் அல்லாமல், கூடவே தமிழர்களை அழித்து போரை முடிப்பதே பிரதமராவதற்கான சிறந்த தகுதியாக உள்ளது. ஓடு ஓடு உடனடியாக தமிழர்களை அழித்து போரை முடித்து பிரதமராகு என உபதேசம் செய்து ஆசிமழை பொழிந்துள்ளனர்.

ஆனால் மருமகளோ மகா கெட்டிக்காரி. தனது தலைமையில் இயங்குமாறு கூட்டுப்படைத் தலைமையகத்தை தன் கீழ் கொண்டு வந்து, தன் கையை ஓங்கச் செய்துள்ளதும் அல்லாமல், ரத்வத்தவின் நண்பரான விமானப் படைத் தளபதிக்கு கல்தா கொடுத்து, ரத்வத்தவின் எதிரியாகக் கருதப்படும் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகாவை கூட்டுப் படைத் தலைமைச் செயலகத்தில் பணியாற்று பவர்களில் ஒருவராக்கியும் உள்ளார். இவ்வாறாக, மாமாவும் மருமகளும் தமிழர்களை அழித்து பௌத்த பீடாதிபதிகளின் ஆசிகளைப் பெற்று, தம் கட்சிக்காரரை பிரதமராக்கும் போட்டியில் முட்டி மோதி வருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்களின் பாதுகாப்பு இருவராலுமே அழிக்கப்படுவதற்கான இலக்காக்கப்பட்டுள்ளமையே முக்கிய செய்தியாக உள்ளது. இதனால் சிங்களப் படைகளின் விலகல் அல்லது விலக்கல் என்பதே தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினையாக உள்ளது. மைக்கல் வால்சர் ஆக்கிரமிப்பு இல்லா நிலையே பாதுகாப்புக்கு – மக்களின் சுதந்திரத்திற்கான ஒரே நிபந்தனை எனத் தெட்டத் தெளிவாக கூறியுள்ளமையை இங்கு அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையீடு

அகதிகளாகி அல்லல்படும் தமிழீழ மக்கள் தமது வாழ்வின் ஜீவநாடியாக உள்ள நிவாரண உதவிகளை சிறிலங்கா வெட்டி வரும் கொடுமை குறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். ஆயினும், சிறிலங்கா தொடர்ந்தும் தொடர்ந்தும் நிவாரண வெட்டை அதிகமாக்குவதும் அல்லாமல் உணவு ஏற்றி வரும் லொறிகளுக்கான அனுமதியை 302 இலிருந்து 125 ஆகக் குறைத்துள்ளது. இதனால் 177 லொறிகள் சேவையை இடை நிறுத்தியுள்ளன.

இவைகளினால் ஆத்திரமடைந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள், நிவாரண வெட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து யூலை 30ம் திகதி மல்லாவியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கியநாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றை முற்றுகையிட்டு, சர்வதேச நிறுவனங்கள் தாங்கள் அனுப்பும் மகஜர்கள் தொடர்பாக கடைப்பிடித்து வரும் மௌனத்திற்கு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர். சர்வதேச அமைப்புக் களின் உள்ளூர் கிளைகள் தமது துன்புநிலை குறித்து போதிய கவனம் செலுத்தவில்லை எனவும் இவர்கள் புகார்கள் செய்துள்ளனர். இதே போன்ற ஆர்ப்பாட்டங்களில் துணுக்காய் பாண்டியன் குளம் ஆகிய பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மக்கள் ஈடு பட்டுள்ளனர்.

மேலும் ஆவணி முதலாம் நாள் முல்லைத்தீவில் சிறிலங்கா அரச செயலகம் தமிழ் பொது மக்களின் முற்றுகைக்குள்ளானது. இதனால் உள்ளே கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற மகாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த CARE, UNHCR பிரதிநிதிகள் உள்ளே செல்ல முடியாது வெளியே நின்றனர். இந்நேரம் CARE அமைப்பின் பிரதிநிதி திரு. மார்க், தமிழ் மக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தின் முக்கியத்துவத்தை, தான் தனது தலைமைக் காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதாகக் கூறினார். இதே போன்ற மக்கள் முற்றுகைகள், பூநகரி உதவி அரச அலுவலகம், FORUD அமைப்பின் காரியாலயம் என்பவற்றின் முன்பாகவும் நடைபெற்றுள்ளது. இதற்கிடையில் முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் பணிபுரிந்த RED BARNA அமைப்பு, சிறிலங்கா அரசின் கெடுபிடிகளால் 1998 மார்கழி முதல் தனது பணிகளை நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது.

### ஐ. நா. மனித உரிமை உப ஆணைக்குழுவில் கோரிக்கை

தற்பொழுது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை உப ஆணைக்குழுவில், தமிழர் மனித உரிமை மையம், செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணை நடத்த விசாரணைக் குழுவொன்றை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணைக்குழு நியமிக்க வேண்டுமெனக் கோரியுள்ளது. அத்துடன் தமிழ் மக்களுக்கு சிறிலங்கா செய்து வரும் மனித உரிமை மீறல்களை விளக்கும் அறிக்கை நூல் ஒன்றையும் மனித உரிமை உப ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளனர். ★

## பட்டினிச்சாவு நிலை அதிகரிக்கிறது! இரு தமிழ்ப் பெண்கள் உயிரிழப்பு!!

சிறிலங்கா அரசாங்கத்தின் உணவை ஆயுதமாக்கும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்களால் தமிழ் மக்களின் நிலை மேலும் மேலும் மோசமாகி பட்டினிச் சாவுகள் அதிகரித்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சியில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த 18 வயது நா.சரஸ்வதி மற்றும் 37 வயது வ.சரோஜாதேவி ஆகிய தமிழ்ப்பெண்கள் போசாக்கின்மையால் அநியாயமாகத் துடிதுடித்துச் செத்துள்ளனர். இவர்கள் வாழ்ந்து வந்த குடியிருப்பில் மேலும் பலர் நோய்வாய்ப்பட்டு மரணத்துடன் போராட வேண்டிய நிலையில் தவித்துக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. மகப் பேற்றினை எதிர்பார்த்து இருக்கும் தமிழ்த்தாய்மாரும் பாலூட்டும் அன்னையரும் மிக கடுமையாக போஸாக்கின்மையால் பாதிப்புற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. இதற்கிடை இவ்வளவு பகிரங்கமான முறையில் சர்வதேச சட்டங்களை மீறும் சிறிலங்காவினை சர்வதேச அமைப்புக்கள் கண்டிக்கத் தவறுவது தொடர்பாக தமிழீழ மக்களும் புலம் பெயர் தமிழீழ மக்களும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். மேலும் யாழ் கஸ்தூரியா வீதியில் யாழ்இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் சிங்கள இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கிய 40 வயதான மகேந்திரன் கலீலா என்ற தமிழ்ப் பெண் தனது கால்களை இழந்துள்ளார்.

இதற்கிடை ஒஸ்லோவிலிருந்து வெளிவரும் SPIRO சர்வதேச திரட்டு உலகில் கண்ணிவெடிகளை உள் நாட்டில் பயன்படுத்தக் கேட்கும் உலகின் நான்கு நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என 551 ம் பக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. இது தமிழ்ச் சமுதாயத்தையே வலுவற்ற மனித கூட்டமாக மாற்றுவதற்கான சிறிலங்காவின் சதி திட்டத்தினைத் தெட்டத் தெளிவாக்குகின்றது. ★

www.tamilarangam.net



# 'தமிழீழ உட்கட்டுமானம்' நூலாகி வெளியாகியது



*தாயின் வளம் கண்டோம்- தனயர்கள் அறிவுத் திறம் கொண்டோம்*

*தளர்விலா தேச நிர்மாணப்பணி - எம்மொவ்வொருவரதும் வீட்டுப்பணியென்று உணர்ந்தோம்*


**1998**ஆம் ஆண்டு ஆவணி 2ம்நாள் ஞாயிற்றுக்கிழமை புலம்பெயர் தமிழர் வரலாற்றில் மகத்தான நாள். அன்றுதான் தங்கள் தாயகத்தின் தமிழீழத் திரு நாட்டின் உட்கட்டுமானங்களைச் சுமந்து வெளிவந்த தமிழீழ உட்கட்டுமானம் நூலை இலண்டன் மிடில்ஸ்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவத்தினர் தமிழீழப் புலம்பெயர் மக்கள் முன்னிலையில் வெளியிட்டு வைத்தனர். திரு. ஐவன் பேதுறுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த இவ் நூல் வெளியீட்டு விழாவினை விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் திரு. அன்ரன் ராஜா அவர்கள் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அருட்திரு. சந்திரகாந்தன் அடிகள், திரு. வைரவமுர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

திரு. பற்றிமாகரன் அவர்கள் நூலினைத் தமிழில் ஆய்வு செய்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் நூலினை வெளியிட்டு வைத்தார். தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தமிழீழச் சேவைகளை எடுத்து விளக்கும் விவரணச் செய்திப்படமும் காண்பிக்கப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழாவினை சிறப்பாக ஒழுங்கு செய்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சிறீதரன் அனைவரது பாராட்டுதலையும் பெற்றார். திரு. சிறீதரன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு அனைவரினது பங்களிப்பையும் வேண்டினார்.

தமிழீழத் தேசம் தமிழீழத் தாயின் புதல்வர்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பினால் உருவாகின்றது என்ற பேருண்மையின் எடுத்துக்காட்டாக சாந்தகப்பை கொண்டு தமிழீழத் தேசம் உருவாக்கப்படும் அற்புதமான ஓவியத்தை அட்டைப் படமாக கொண்டு தமிழீழ உட்கட்டுமானம் நூல் உருவாக்கப்பட்டுக் காட்சி அளித்தது. அந்த பச்சை வண்ண நூலைத் தொட்ட ஒவ்வொருவரதும் நெஞ்சங்களில் தங்கள் தாயே தங்களை கட்டி அணைத்து போன்ற ஒரு பரவசம். தங்கள் தந்தையே தங்களை வருடி விட்டு போன்று ஒரு இன்ப உணர்வு. நினைவுகளின் பசுமை அந்த இனிய தாய்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து நிற்கின்றோமே என்ற துன்ப உணர்வில் நெஞ்சங்களைத் துடிக்க வைத்து கண்களில் நீர் கசிய வைத்தது. அந்த ஏக்கத்தைப் போக்கும் வகையில் தமிழீழ மக்களின் தேசத் தலைவனின் செய்தி நூலின் அணிந்துரையாக திகழ்ந்து விடுதலைக்கு வெகு தூரமில்லை, எங்கள் தமிழீழத் தாய் மடியில் விழுந்து புரண்டு எழுந்து சுதந்திரக்காற்றை எம் மூச்சாக மாற்றும் நாள் நம்மாலே விரைவுபடுத்தப்படல் வேண்டுமென்ற உணர்வை உள்ளங்களில் எழுப்பியது.

"சுய நிறைவான தன்னில் தானே தங்கி நிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாக வேண்டும் என்பதே எனது விருப்பம். மக்கள் தம்மைத் தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில் உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

என்பது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு திரு.வே.பிரபாகரன் அவர்களின் செய்தி. ஒரு சிறந்த ஜனநாயக ஆட்சிமுறைக்குத் தன்னிறைவுப் பொருளாதாரமுள்ள சுரண்டலற்ற சமுதாயம் மிகமிக முக்கியமானது. அதற்கு ஏற்ற வகையில் வளப் பகிர்வுகள் மூலதன நகர்வுகள் தொழில் முயற்சிகள் வருமான மறுபகிர்வுகள் திட்டமிடப்பட்டாலே திறமையான மக்களாட்சி மலரும். இந்தப் புதிய சமூகத்தில் தான் உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ முடியும். தேசியத் தலைவரின் இந்த மகத்தான கருத்தினை நிறைவு செய்யக் கூடிய முறையில் தமிழீழ உட்கட்டுமான நூலின் ஆய்வுகளும் செயற்திட்டங்களும் நூலில் விரிந்து செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.




தமிழீழ உட்கட்டுமானம் நூல் ஒன்பது அத்தியாயங்களைக் கொண்ட 109 பக்கங்களைக் கொண்டு திகழ்கிறது. இதில் முதல் நான்கு அத்தியாயங்களும் தமிழீழ மக்களுடன் தொடர்பான விடயங்களைப் பேசுகின்றது. தமிழீழ மக்களின் தாயகத்தின் பிரதான நகரங்கள் குறித்து முதலாவது அத்தியாயத்தில் பேசப்படுகின்றது. இவ் அத்தியாயம் தேசத்தின் நிர்வாக நிர்ணயம் தொடர்பாக ஆராயும் அத்தியாயம் என்பதினால் அரசியல் ரீதியான முக்கியத்துவமும் இந்த அத்தியாயத்திற்கு உண்டு. தமிழீழத் தேசம் பிரதேச வேறுபாடுகளற்ற பூமியாக விளங்கக்கூடிய வகையில் வடக்கென்றும் கிழக்கென்றும் வன்னியென்றும் தீவு என்றும் வளர்க்கப்பட்டு வந்த பேதங்கள், மதரீதியாக நிலவிய பேதங்கள் எல்லாம் மறையக்கூடிய வகையில் மிக நுணுக்கமான திட்டமிடலுடன் தேச நிர்வாக நிர்ணயம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழீழம் 20 மாநிலங்களை உள்ளடக்கிய தேசமாக விளங்கும் ( 3.3.1). இதனுடைய தலைநகரமாக திருகோணமலை மாநிலம் திகழும் (3.11(1)). வடமாநிலத்தின் தலைநகரமாக மாங்குளமும் (4.6).கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரமாக கரடியனாறும் விளங்கும். ஒவ்வொரு மாநிலமும் ஒரு பிரதான நகரத்தைக் கொண்டு விளங்கும். நல்லூர் மாநிலம்- பிரதான நகரம் யாழ்ப்பாணம், வரணி மாநிலம்- பிரதான நகரம் கொடிகாமம், கரைச்சி மாநிலம்- பிரதான நகரம் கிளிநொச்சி, பூநகரி மாநிலம்- பிரதான நகரம் பூநகரி, முல்லைத்தீவு மாநிலம் - பிரதான நகரம் தண்ணீரூற்று, மாங்குள மாநிலம் - மாநிலத் தலைநகரம், மாங்குளம் , மாந்தை மாநிலம் - பிரதான நகரம் உயிலங்குளம், மடு மாநிலம்- பிரதான நகரம் மடு வீதி, வவுனியா-வன்னி மாநிலம் - பிரதான நகரம் ஓமந்தை, குச்சவெளி மாநிலம்- பிரதான நகரம் திரியாய், திருகோணமலை மாநிலம் - தமிழீழத் தேசியத் தலைநகர் திருகோணமலை, மூதூர் மாநிலம் - பிரதான நகரம் கிளிவெட்டி, வாகரை மாநிலம் - பிரதான நகரம் மாங்கனி, வெல்லாவெளி மாநிலம் - பிரதான நகரம் பேராறு(மகா ஓயா), மட்டக்களப்பு மாநிலம் - மாநிலத் தலைநகரம், கரடியன் ஆறு, அக்கரைப்பற்று மாநிலம் - பிரதான நகரம் பாலமுனை, பொத்துவில் மாநிலம்- பிரதான நகரம் பொத்துவில், அறுவாக்காடு மாநிலம் - பிரதான நகரம் பொம்பரிப்பு , புத்தளம் மாநிலம் - பிரதான நகரம் புத்தளம், சிலாபம் மாநிலம்-பிரதான நகரம் சிலாபம்.

2வது அத்தியாயத்தில் தமிழீழ மக்களது நடமாடும் சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையிலும் தமிழீழ மக்களது பொருளாதார நகர்வுகளை ஒருங்கிணைக்கும் வகையிலும் தமிழீழத் தேசத்தின் தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமான நிலையங்கள் ஆகியன குறித்து ஆராயப்பட்டுள்ளது. மாங்குளம், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய முக்கிய நகரங்களை இணைக்க கூடியவகையில் மிகச்சிறந்த பெருந் தெருவும் (Super High Way) இதற்கு சமாந்தரமாக வாழைச்சேனை மட்டுமான புகைவிரதப் பாதையும், வவுனியா முதல் பறையனாங்குளம் வரையான புகைவிரதப் பாதையும், மீன்பிடித் துறை முகங்களுடான கடற்கரைப் பாதையும், மாங்குளம் வெள்ளாங்குளம் வீதி அமைப்பும் ஆராயப்பட்டுள்ளது. பலாலி, திருகோணமலை ஆகிய இடங்களில் சர்வதேச விமான நிலையங்களும், மண்டை தீவு, மாங்குளம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் சிறிய விமான நிலையங்களும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீன்பிடித் துறை முகங்கள், ஏற்றுமதி இறக்குமதித் துறைமுகங்கள், ஏரிப்போக்குவரத்துக்கள், கடற்பயணம் ஆகியன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

3வது அத்தியாயத்தில் மக்களின் தொழில் முயற்சிகளுக்கும் வாழ்க்கைக்கும் இன்றியமையாத மின்சாரத்தைப் பெறுவது தொடர்பாகவும் 4வது அத்தியாயத்தில் ஜனநாயக வாழ்வின் அச்சாணியாக கருதப்படும் (Public Sphere) எனப்படும் பொதுமக்கள் கருத்துக் கோளத்தை உருவாக்கத் தேவையான தொலைத் தொடர்பு பரிவர்த்தனத்தை அபிவிருத்தி செய்வது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

5வது அத்தியாயத்தில் நன்னீர் பெறுதல் தொடர்பான ஆய்வுகளும், 6ம் அத்தியாயத்தில் 20 மாநிலங்களுக்கும் அதன் நகரங்களின் தேவைகளுக்கும் ஏற்றபடி நீர் வழங்கலுக்கான திட்டங்களும் 7ம் அத்தியாயத்தில் நீர்ப்பாசனம் நீர் முகாமைத்துவம் தொடர்பான ஆய்வுகளும் இதற்கேற்ப விவசாயத்தைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான விடயங்களும் 8ம் அத்தியாயத்தில் தமிழீழ நிலப்பயன்பாடும் இறுதியாக 9ம் அத்தியாயத்தில் தமிழீழக் கைத்தொழிலும் மிக விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளுடன்

தொடர்ச்சி 15ம் பக்கம்.....

www.tamilarangam.net



# தமிழருக்கு இழைக்கப்படும் அநீதியை உலகம் கண்டு கொள்ளத் தவறுகிறது

*முன்னாள் ஐ.நா. சர்வதேச ஆலோசகர் இ.நடராஜா கொழும்பு பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரையில் இருந்து ஒரு பகுதி*

இலங்கைத் தமிழர்கள் சாத்வீகமுறையில் தங்கள் உரிமைகளைப் பெறமுடியாத காரணத்தால் விரக்தியடைந்து தமிழர் விடுதலைக்கூட்டணி 1976ம் ஆண்டில் தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தைப்பாது காக்க தமிழ் ஈழம் ஒன்றுதான் சாலச் சிறந்தது என்று தீர்மானம் எடுத்தது. 1977ஆம் ஆண்டு பாராளு மன்றத்தேர்தலில் மக்கள் முன் இந்த ஈழத்தீர்மானத்தை முன்வைத்து வெற்றியும் அடைந்தார்கள். ஆனால் இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அவர்களுக்கு மனோதைரியமும் மக்கள் இட்ட ஆணையை அமுல்ப்படுத்த திட்டங்களும் இருக்கவில்லை.

இந் நிலையில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

**வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் பயங்கரவாதத்திற்கும் ஆயுதம் ஏந்திய விடுதலைப்போருக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்தும் தெரியாததுபோல் செயற்படுகிறார். பயங்கரவாதம் என்பது ஒரு சிறு குழுவால் நடத்தப்படுவதாகும். ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இங்கு விடுதலைப்போர் நடாத்துகிறார்கள். இது பயங்கரவாதம் என்று கூற முடியாது.**

வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் பயங்கரவாதத்திற்கும் ஆயுதம் ஏந்திய விடுதலைப்போருக்கும் உள்ள வித்தி யாசம் தெரிந்தும் தெரியாததுபோல் செயற்படுகிறார். பயங்கரவாதம் என்பது ஒரு சிறு குழுவால் நடத்தப்படுவதாகும். ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இங்கு விடுதலைப்போர் நடாத்து கிறார்கள். இது பயங்கரவாதம் என்று கூற முடியாது. சிங்களப் பேரினவாதிகள் செய்த அடக்குமுறையால் ஏற்பட்ட விபரீதங்களால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இழந்த சுதந்திரத்தை மீளப்பெற போராடுகின்றனர். வியட்நாம் விடுதலை யுத்தம் பயங்கரவாதமா?

அமெரிக்க மக்கள் தங்கள் சுதந்திரத் திற்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக் ஆயுதம் ஏந்தி விடுதலை யுத்தம் புரிந்தார்கள் அதுவும் பயங்கரவாதமா?

சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திர த்திற்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக இராணுவ ரீதியாக யுத்தம் புரிந்தார். இதுவும் பயங்கரவாதமா? அல்லது விடுதலை யுத்தமா? இதுபோல் தமிழர் தாயகத்தில் தங்கள் சுதந்திரத்திற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு அடிப்படையான உண்மையான காரணத்தை சிங்கள மக்களும் இந்திய மக்களும் அகில உலகமும் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு நடக்கும் யதார்த்த நிலைமைகளை மற்றவர்கள் சரியாகப் புரியவில்லை என்று அறிய மனவேதனை உண்டாகிறது.

1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத் தொடரில் 54 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கையில் சிங்கள இராணுவத்தை தமிழர் தாயகத்திலிருந்து விலகப் பண்ண வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களோ மேற்கு உலக நாடுகளோ இலங்கையில் தமிழர் தாயகத்தில் நடக்கும் கொடூரமான மனித உரிமை மீறல்களையும் அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவதையும் பற்றி விமர்சனம் செய்யாதது வேதனைக் குரியது. நவாலி சிறிஸ்தவ ஆலயத்தை குண்டு வீசி அழித்ததும் அதில் தங்கியிருந்த 200 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது பற்றி உலக சமுதாயம் மௌனம் கடைப் பிடித்ததும் மிகவும் வேதனைக்குரிய விடயம். இந்தக் கொடூரமான சம்பவத்தை பரிசுத்த பாப்பரசர் கடுமையாக கண்டனம் செய்தார்.

இதுபோல் திருகோணமலையில் குமரபுரத்தில் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 81,000 வீடுகள் யுத்தத்தினால் சேதமாக்கப்பட்டன. வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் 1600க்கும் மேற்பட்ட இந்துக் கோவில்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டன. 2000 ஆண்டுகளுக்கு முன்பேயிருந்த பிரசித்தி பெற்ற புனித இந்துக் கோயில்களும் சேதமடைந்த இவற்றுள் அடங்கும். தலதா மாளிகை சேதமுற்றபோது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்பன கடும் கண்டனத்தை தெரிவித்திருந்தன. ஆனால் அரசாங்கப் படைகளின் தாக்குதல்களினால் இந்து கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் சேதமுற்றது பற்றி அவர்கள் மௌனம் சாதித்தார்கள். அவர்கள் தங்கள் மனச்சாட்சியை அடைவு வைத்து விட்டார்களா? இவ்விதம் அநேக சம்பவங்களை கூறலாம்.

வடபகுதிக்கு அனுப்ப வேண்டிய உணவு, மருந்துப் பொருட்களை மிகவும் குறைத்தது அங்குள்ள தமிழ் மக்களை பட்டினிச் சாவால் மடிய வைக்கும் இனப்படுகொலை என்றே கூறலாம்.

மேற்கு உலகம் தமிழர்களின் உயிர்களுக்கும் அவர்களின் மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கும் ஒருவித மதிப்பும் இல்லை என்று எண்ணலாம். ஆனால் இதுபற்றிய தற்போதைய தமிழ் கட்சிகளும், தமிழ்க் குழுக்களும் மேற்கு உலகத்தை விமர்சனம் செய்யவில்லை. இந்த தமிழ்க்கட்சிகளுக்கு அரசாங்க த்தையோ அல்லது மேற்கு உலகத்தையோ பகைக்க விருப்ப மில்லைபோல் தெரிகிறது. உண்மையை உலகிற்கு எடுத்துக்கூற ஏன் தயக்கம் கொள்ள வேண்டும்?

பாராளுமன்றத்தில் யுத்தத்திற்கான வரவு செலவு திட்டம் வரும்பொழுது தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு சாதகமாக வாக்குகளை அளிப்பது மிகவும் விசித்திரமான விடயம்.

இலங்கை அரசியலில் சிங்களப் பேரினவாதிகளின் செல்வாக்கு மேலோ ங்கி இருக்கிறது. அவர்களுக்கு அரசியல் தீர்வில் நம்பிக்கை இல்லை. இராணுவத் தீர்வே அவர்களின் விருப்பம். சுருங்கக் கூறின் இது இன ஒழிப்பில்தான் முடியும். இந்த உண்மையை தமிழ் நாட்டிற்கும் இந்திய மத்திய அரசுக்கும் மேற்கு உலகிற்கும் புள்ளி விபரங்களுடன் தமிழ் தரப்பினர் எடுத்துரைப்பது மிகவும் அவசியம். வன்னியில் இராணுவ ரீதியில் செயல்பட்டால் இலங்கை இன்னுமொரு வியட்னாமாக மாறும். இது தமிழர், சிங்களவர் உட்பட சகலருக்கும் கடும் விளைவுகளை ஏற்படுத்தும். ★

# எல்லைகளைத் தமிழர் பிரதேசத்துள்ளே நகர்த்தும் சிங்களப்பேரினவாத திட்டத்திற்கு இலக்காகும் திருமலை

## T விடுதலைப்புலிகளின் மறைவிடங்களை அழிப்பதாக கூறிக் காணிகளைத் துப்பரவு செய்து சிங்களக்குடியேற்றங்கள்

சூரைகடலோரம் நித்திலங் கொழிக்குங் கோணமாமலை என தமிழ் ஞானசம்பந்தரால் தேவார வாழ்த்தொலி பெற்ற தமிழர் தொல்நகர் திருகோணமலை சிங்களப் பேரினவாதிகளின் எல்லைகளை தமிழர் பிரதேசத்துள் நகர்த்தல் என்னும் திட்டத்தினால் சிங்களப் பூமியாக்கப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களை பாதுகாப்புக் காரணம் என்ற போர்வையில் அவர்களது பாரம்பரிய கிராமங்களில் இருந்து வெளியேற்றும் சிறிலங்கா, அக்கிராமங்களில் சிங்களவர் களைக் குடியேற்றி வருகிறது. ஜே. ஆர். ஜயவர்த்தனாவால் தொடங்கப்பட்ட எல்லை களைத் தமிழர் பிரதேசத்துள் நகர்த்தல் என்னும் செயற்திட்டத்தினால் 1983க்கு பின் பல தமிழ்க்கிராமங்கள் பல சிங்கள மயமாக்கப்பட்டன. தென்னமரவாடி கிராமத்து மக்கள் இரவோடிரவாக விரட்டியடிக்கப்பட்டு அப்பகுதிகளில் சிங்களவர்கள குடியேற்றப் பட்டனர். கிருஸ்ணன் கோவில், பிள்ளையார் கோவில் என்பனவற்றின் புனிததன்மைகள் சிங்கள வர்களால் அழிக்கப்பட்டு அவை சிங்களக் குடியேற்றங்களுக்கான வீடுகள் அமைப்ப தற்கான தடிகள் கம்புகள் கிடுகுகள் வைக்கும் சேமிப்புக் குதங்களாக் கப்பட்டுள்ளன. கோணேஸ்வரர் கல்வெட்டு உள்ள கோட்டை முதல் வரலாற்றுப் புகழ் மிகு மணிக்கூட்டுக் கோபுரத்திற்கும் இடைப்பட்ட செந்தமிழ் மண் சிங்களக் குடியேற்றப் பிரதேசமாக காட்சியளிக்கின்றது.

அண்மையில் திருமலை வைரவர் ஊற்றுக்கும் கப்பல் துறைக்குமிடைப்பட்ட நகர்ப்புறப் பகுதியினை புல்டோசர் கொண்டு துப்பரவு செய்த சிறிலங்காப்படைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மறைவிட வசதிகளை அழிப்பதற்கான நடவடிக்கையென வர்ணித்தன. ஆனால் அப்பகுதிகளைத் துப்பரவாக்கியது புதித்ாக சிங்களவர்களைக் குடியேற்றவே என்பதை தற்பொழுது புற்றீசல் போல் அங்கு எழுந்து நிற்கும் சிங்களவர்களின் புதிய குடிமனைகள் காடசியளிக்கின்றன. இவ்வாறு சிங்களக் குடியேற்றங்கள் நடாத்தப்படுவதற்கு திருகோணமலையின் உலகப்பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகத்தின் இராணுவ வர்த்தக கேந்திர முக்கியத்துவங்கள் மட்டுமல்ல திரு கோணமலையே தமிழீழத்தின் தலைநகர் என்ற வரலாற்று உண்மையினை மாற்றியமைப்பதும் காரணமாக உள்ளது.

தமிழீழ பொருண்மிய நிறுவனத்தால் வெளிமிடப்பட்ட தமிழீழ உட்கட்டுமானம் திருகோணமலையினை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளமை திரு கோணமலையின் முக்கியத்துவத்தை எடுத்துவிளக்குகின்றது. 3.3.11(1) திருகோணமலை மாநிலம் : தமிழீழத்தின் தலைநகர். இப்பிரதேசத்தில் அமையும். தலைநகரின் நிர்வாக பிரதேசமாக இதன் அயற்பகுதிகள் அபிவிருத்தியடையும். சீனன்குடா, தம்பலகாமம் எனடபன இதில் அடங்கும். இவ்வாறு அன்றும் இன்றும் என்றும் தமிழர்களின் கலாச்சார வர்த்தக இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையினைச் சிங்கள மயப்படு த்துதல் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மட்டுமல்ல தமிழர்களுடைய தாயகம் என்ற வரலாற்று உண்மையையே கருவறுப்பதற்கான உத்தியாக சிறிலங்காவால் கையாளப்பட்டு வருகிறது. இலங்கைத் தீவின் ஜெருசலேமாக திருகோணமலையை மாற்றி ஜெருசலேமை யூதர்களும் பலஸ்தீனர்களும் உரிமை கொண்டாடுவது போல தமிழர்களுக்கே சொந்தமான திருகோணமலையையும் தமிழ் – சிங்கள தேசியங்களுக்கு பொதுவான பூமியென்ற போலிச்சரித்திரத்தை உருவாக்குவதே சிறிலங்காவின் நோக்கு என வர்ணிக்கும் ராஜா என்ற ஆய்வாளர் இந்நிலை தமிழீழ விடுதலைப்புலிகள் வலிமையான சக்தியாக உள்ளவரை பகற்கனவே எனக் குறிப்பிட்டு ள்ளதுடன் சமீப கால வரலாறுகள் திருகோணமலை தமிழீழத் தலைநகராக விடுதலைப் புலிகளால் மீண்டும் நிறுவ ப்படுமென்பதை உறுதிப்படுத்தி வருவதாக நம்பிக்கையும் தெரிவித்துள்ளார். ★

# பாருக்கு உபதேசம்..... படைகளுக்கு அல்ல

சார்க் மாநாட்டுச் 'சமா'வும் கச்சேரியும் ஒருமாதிரி முடிவுற்றுள்ளது. செம்மணி புகழ் அம்மணியின் நாட்டியமும் புதிர் போடும் கதிர்காமரின் நட்டுவாங்கமும் நடந்தேறியுள்ளன. இன்றைய உலகில் யார் யார் எதையெதைச் செய்வது என்ற தகுதியே இல்லாமற் போய்க் கொண்டிருக்கிறது. எதையாவது பறைசாற்றிவிட்டு எதையாவது செய்துவிடும் மனோபாவம் ஊரளவில் மட்டுமல்ல, பாரளவிலும் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்திய – பாகிஸ்தான் அணுஆயுத விவகாரத்திற்கு சிறிலங்காவின் நவீன ஆயுத வியாபாரி தலைமை தாங்கியுள்ளார். உலகச் சந்தையில் தனது நாட்டையே அடைவு வைத்து நவீனஆயுத நுண்கருவிகளையும் பயிற்சிகளையும் வாங்கி ஓர் இனஒழிப்பையே நடத்திக் கொண்டிருக்கும் இந்தப் பெண்மணியின் தலைமையில் இவரது வழி காட்டல்களோடு அமர்ந்திருக்கும் நிலையில் இந்தியாவும் பாகிஸ்தானும் தாழ்ந்துவிட்டனவா? என்ற கேள்வியே சுயமுள்ள பலரின் எண்ணங்களில் எழுந்துள்ளன.

ஒரு பக்கத்தில், ''செம்மணி புதை குழிகளில் தன்னாற் பாது

**– புலவர் –**

காக்கப்படவேண்டிய அப்பாவிமக்கள் சடலங்களாக'', இது மனித உரிமை மீறலின் உச்சக்கட்டமென பல்வேறு மனித உரிமை நிறுவனங்களால் கருதப்பட்டும் கண்டிக்கப்பட்டும் வருகின்ற அதே வேளையில், மறுபக்கத்தில் இந்த அம்மணி உலகுக்கு உபதேசம் செய்வதை இந்த உலகு அனு மதித்துள்ளது.

தமிழ் மக்கள் விமானத் தாக்குதல், எறிகணை வீச்சுகளின் மூலம் ஆயிரமாயிரமாக அகதிகளாக்கப்பட்டும் நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப் பட்டும் சிறிலங்காவின் இனசங்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருவதை இந்த உலகு தடுக்கவும் தண்டிக்கவும் தயக்கம் காட்டிவருவது கண்கூடு. இதற்குக் காரணம் ஆயுதச் சந்தையில் இன்று ஒரு முக்கிய வாடிக்கையாளராகச் சிறிலங்கா இருப்பதேயாகும்.


தனது பொருளாதாரம் சிதைந்து சீரழிந்து தனது நாடு போர்வழியே சென்று புதைந்து போனாலும் பரவாயில்லை – தனது அரசியலாதிக்கத்தைத் தமிழ்த் தேசிய இனத்தின் மீது சுமத்தி விடலாமெனத் துடித்துக் கொண்டிருக்கும் சிங்களப் பௌத்த அரசின் செய்தி ஊடகத் தணிக்கைகள் சிறிலங்காவிற்குள் மட்டுந்தானா அல்லது உலகப் பரப்பிலுமா என்ற சந்தேகம் இன்று பரவத் தொடங்கியுள்ளது.

பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் சிறிலங்கா

அரசின் படைகள், தமது வெறித் தனத்தைக் கட்டவிழ்த்ததன் விளைவே செம்மணிப்புதைகுழிகள் என்றால், சிறிலங்காவின் கட்டுப்பாட்டுக்குள் முழுத் தமிழீழமும் அடங்கும் நிலையை நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

நானூறு நாற்பதாயிரமாகி நமது மக்கள் தெருநாயைவிட கேவலமாகப் பௌத்த சிங்களப் படைகளால் நடாத்தப்படுவர் என்பதை நம்மவர் எவரும் புரிந்து கொள்ளத் தவறக்கூடாது. படுகொலைக்குப் பாத்திரமாக இருக்கும் ஒரு பாதக அரசின் அரக்கப் போக்கினைக் கண்டும் காணாமலும் இருக்கும் இதே வல்லரசுகளும் அவற்றின் கால்வருடிகளும் மேலைத்தேய செய்தி ஊடகங்களும் தான், நாளை முழுதாக அடிமைப்படுத்தப்பட்ட தமிழீழத்தில் நடக்கக்கூடிய கொடுமைகளையும் கொடூரங்களையும் பார்த்துக் கொண்டு மௌனம் சாதிக்கப்போகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தமது அரசியற் – பொருளாதார நலன்களை நோக்கிற் கொண்டு உலக அரங்கில் அக்கிரமங்களையும் மனித உரிமை மீறல்களையும் சகித்துகொண்டும் பல சமயங்களில் அவற்றிற்குச் சாமரம்



வீசிக்கொண்டும் இருக்கும் வல்லரசுகளின் நியாயமற்ற, தர்மமற்ற போக்கு வரலாற்றினால் நிச்சயம் குறிக்கப் பட்டேயாகும்.

உலக மகாயுத்தச் சுவடுகளைத் தோண்டி போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க நிற்கும் சட்ட நிறுவனங்கள், நீதி நிறுவனங்கள் இன்று நம் கண்முன்னே நடக்கும் இனப் படுகொலைகளைத் தடுக்க முன்வரவேண்டும்!

உலக மனிதநேயத்திற்குச் சாவு மணியடிக்கும் கொடியவரின் கொட்டங்களைக் கண்டிக்க முன்வராத செய்தி ஊடகங்கள் தமது கையாலாகத் தன்மைக்கு வெட்கித் தலைகுனியவேண்டும். இன்று நடக்கும் கொடுமைகளை நாம் கண்டிக்கவும் எதிர்க்கவும் தயுங்குவோமானால், புதைகுழிகள் செம்மணியில் மட்டுமல்ல, தமிழீழத்தின் பலபாகங்களிலும் தோண்டப்பெறும் என்பதை நாம் நெஞ்சில் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இப்போது நடுநிலையென்றும், நடிநிலையென்றும் கூறிக்கொண்டு இருந்துவிட்டுப் பின்னர் எமது இனத்திற்காக முதலைக் கண்ணீர் வடித்தும் பிரயோசனம் இல்லை. எமது மண்ணும் மக்களும் சித்திரவதைகளையும், சிறுமைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவற்றை உதாசீனம் பண்ணிக்கொண்டு, இங்கு கலையும் கவிதையும், மொழியும் வளர்ப்பதாகவும் ஆத்மீகமும் அறிவும் வளர்ப்பதாகக் கூறுவது, சில்லறை சேர்த்து வயிறு வளர்க்கும் யுக்திகளுள் ஒன்றாகவே கருதப்படும்!

நமது தேசம் துன்பத்திற் துடிக்கையில், நாம் புலம்பெயர் நிலங்களில் பெருமைப்படப் - பெரிதாக ஒன்றுமில்லை. இதைவிட, நாம் புலம்பெயர் நிலங்க்ளில் நம்மை நிலைநிறுத்தப் பயன்படுத்தும் ஒரே வாக்கியம் தாய்நாட்டுப் பிரச்சனை என்பதேயாகும்.

மண்ணில் எமது மக்களின் குருதியையும் கண்ணீரையும் அவர்களது இழப்பு களையும் இன்னல்களையும் முதலீடாகப் பயன்படுத்தித் தமது சொந்த உறவுகளையும் அவர்களின் எதிர்காலத்தையும் நாம் கட்டி எழுப்ப முயல்வோமாயின், நாம் தர்மத்தின் தண்டனைக்கு தயாராக வேண்டிமிருக்கும்! ★

# ரத்வத்தவுக்கு மகாநாயக்காவின் பிறந்ததின ஆசீர்வாதம்

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தனது 66 ஆவது பிறந்த தினத்தை கடந்த மாதம் 13ஆம் திகதி மகாநாயக்கர்கள் மற்றும் 220 பௌத்த துறவிகளின் ஆசீர்வாதத்துடன் கொண்டாடினார். அவரை ஆசீர்வதித்து நல்லுரைகள் வழங்கிய மகாநாயக்கர்கள் அவருக்கு உள்ள அல்லது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தகுதி ஒன்று பற்றி கூறியிருக்கின்றனர்.

"இந்த நாட்டிலே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நடைபெறுகின்ற போர் மிகவும் வெற்றிகரமாக நடைபெறுகின்றது. எதுவித ஏமாற்றுவித்தையும் இல்லாது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த போரை நெறிப்படுத்துகிறார். அவர் எதிர்காலம் பிரதமராக இருப்பதற்கும் தகுதியுடையவர்." என மல்வத்து மகாநாயக்கர் கூறியிருக்கின்றார்.

இதைவிட ரத்வத்தவுக்கு சிறந்த பிறந்த தினப்பரிசு – உருப்படியான பிறந்த தினப்பரிசு எதுவும் இருக்க முடியாது என துணிந்து கூறலாம்.

இங்கு எதிர்காலப் பிரதமர் என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் 3ஆவது இடத்தைக் குறிக்கிறதா? அல்லது 1994இன் பொதுஜன ஐக்கிய முன்னணி வாக்குறுதி வழங்கியதற்கு இணங்க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கிய பின் அமையப் போகின்ற நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவியைக் குறிக்கிறதா? மகாநாயக்காவின் ஆசீர்வாதம் எவ்விதம் பலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் மகாநாயக்கர்களின் ஆசீர்வாதம், அவர்களின் வழிகாட்டல், அவர்களின் கூற்றுக்கள் புனிதமானவை. விமர்சனத்திற்கு உட்படாதவை. ஆட்சியாளர்கள் மகாநாயக்கர்களின் ஆசீர்வாதம் பெறாது எவ்வாறாவது அவர்களைச் சமாதானம் செய்யாது எதனையும் செய்ய மாட்டார்கள் என்பது நீண்டகால நடைமுறை.

"பிக்குகளுக்கும், அரசியலுக்கும் தொடர்பில்லை. மடங்களில் தானம் வாங்கிக் கொண்டு இருக்க வேண்டியதுதான் அவர்களின் வேலை" எனக்கூறிய இடைக்காலப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல நிரந்தரப் பிரதமராக முடியவில்லை என்பது வரலாறாகும்.

ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் பிக்குகள் புதிய வேலை ஒன்றைத் தொடங்கியிருப்பதாக – நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண கூறியிருக்கின்றார். அதாவது,



மகாநாயக்கர்கள் இப்பொழுது உலக வங்கியைப் போல பணத்துக்காக வேலை செய்கின்றார்கள். மாகாணசபைத் தேர்தலை பின்போடுமாறு சொன்னதற்காக, இப்போது வரி விலக்களிக்கப்பட்ட பென்ஸ் கார் கேட்கிறார்கள் எனக் கூறியிருக்கிறார். அது வழங்கப்பட்டும் இருக்கிறது.

மகாநாயக்க தேரர்கள் போர் முடியும்வரை தேர்தல் வேண்டாம் என கூறியிருப்பதற்கே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். இத் தேர்தலை நடத்த வேண்டாம் என்ற மகாநாயக்கர்களின் கூற்றை ஐக்கிய தேசியக் கட்சி கூட விமர்சிக்காமையானது, மகாநாயக்கர் மீது ஐ.தே.க. வைத்திருக்கின்ற நன்மதிப்பைக் காட்டுகின்றது. அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருப்பத்தையே மகாநாயக்கர்கள் பிரதிபலித்த போதும் மகாநாயக்கர்களைப் பகைத்துக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி துணியவில்லை.

எனவே தேர்தல் நடக்கிறதோ இல்லையோ, போர் தீவிரமாக நடைபெறப் போவது மட்டும் வெளிப்படை. அத்துடன் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றாலும் கூட மகாநாயக்கர்களின் கதாநாயகனாக அனுருத்த ரத்வத்தவே இருக்கப் போகிறார்.

இது ஒருபுறமிருக்க, காலனித்துவ ஆட்சியாளர் முதல் இன்றுவரை, சிங்கள மக்களுக்கு அரசியல், பொருளாதார சமூகப் பண்பாட்டு ரீதியாக ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி ஆராய மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்துடன் அமைக்கப்பட்ட சிங்கள ஆணைக்குழு, தனது ஆராய்ச்சியின் பெறுபேறாகக் கிடைத்த இறுதி அறிக்கையை தலதா மாளிகையில் வைத்து மகாநாயக்கர்களிடம் கையளித்திருக்கிறது. இந்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை அரசின் தீர்வுப் பொதியை குப்பைத் தொட்டிக்குள் போட வேண்டும் என்று கூறியதுடன், தமிழர்களுக்கு எதையும் வழங்கக்கூடாது எனவும் அரசுக்கு ஆலோசனை கூறியது.

"இந்த இடைக்கால அறிக்கை வரலாற்றுக் குப்பைத் தொட்டிக்குள் போடப்படும்" எனக்கூறிய அமைச்சர் மங்கள சமரவீரவின் தலை வெடித்துச் சிதற, சிதறு தேங்காய் உடைத்தலும் வசைகள் பாடியதும் மகாநாயக்கர்களின் வழிகாட்டலின் கீழ் வெகு சிறப்பாகவே நடந்தேறின. பின்னர் நான் அவ்வாறு கூறவில்லை எனக்கூறி அமைச்சர் சமரவீர, மகாநாயக்கர்களின் கோபத்தைத் தணிக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து இறுதி அறிக்கைக்கு எவ்வாறான வரவேற்பு இருக்கும் என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆக, மகாநாயக்கர்களை பணத்தின் மூலம் சம்மதிக்க வைக்க முடியாத ஒரே ஒரு விவகாரம் தமிழ் மக்களுக்கு சில 'சலுகைகளையாவது' வழங்குவதே. அதனை அவர்கள் வெளிப்படையாகவே சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்தும் விட்டனர்.

அத்துடன் அமைச்சர் ரத்வத்தவுக்கு வழங்கிய ஆசீர்வாதமும், அவ்வாறே பணம் பெறாது வழங்கப்பட்டது என நம்புவோமாக! ★

# நினைவுகள் அழிவதில்லை

*தமிழீழ மக்களின் இறந்தகால வரலாற்றினை புரட்டிப் பார்க்கும்போது ஏன் நிகழ்காலம் கீழ்நிலையிலிருக்கின்றது என்பதற்கான காரணத்தைத் தெளிவாகவே புரிய முடிகின்றது. அதுபோலவே நிகழ்கால வரலாற்றினை அவதானிக்கும்போது தமிழினத்தின் எதிர்காலம் எவ்வாறு சீரும் சிறப்புமாக ஒளிமயமாக இருக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடிகின்றது. எனவே தமிழீழ மக்கள் தெளிவான வரலாற்று அறிவினைக் கொண்ட அரசியல் விழிப்புணர்வுள்ள மக்களாக மாறவேண்டியது வரலாற்று நியதியாகின்றது.*

எழுதியவர் : வே. பாலகுமாரன்

**1961**ஆம் ஆண்டு யூன் மாதம் பயங்கரவாதிப் பட்டம் சூட்டப்பட்ட மண்டேலா தேடப்படும் நாட்கள். அகிம்சை வழியில் மென்முறைப் பாங்கில் முயன்று எதுவும் கிட்டாத நிலையில் மண்டேலாவும், அவரது ஆபிரிக்க தேசிய காங்கிரசும் ஆயுதமேந்திப் புதுப்பாதை காண முயன்ற காலகட்டம். அப்போது நெல்சன் மண்டேலா தன் மக்களை நோக்கி இவ்வாறு மொழிந்தார்.



மிகக் கடினமான பாதையொன்றை இப்போது நான் தெரிவு செய்துள்ளேன். உங்களோடு இணைந்து இந்த அரசுக்கு எதிராக அங்குலம் அங்குலமாக, மைல் மைல்களாக வெற்றி கிடைக்கும் வரை போரிட நான் முடிவு செய்துள்ளேன். இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்னோடு வந்து இணையப் போகின்றீர்களா? அல்லது உங்களை நசுக்கி, ஒடுக்கி வருத்தும் அரசிற்கு உங்கள் ஆதரவை வழங்கப் போகின்றீர்களா? எம் மக்களிற்கு வாழ்வா சாவா எனத் தீர்மானிக்கப்படப் போகும் இக் கணத்தில் நீங்கள் வாய் மூடி மௌனிகளாக நடுநிலைவாதிகளாக இருந்துவிடப் போகின்றீர்களா? என்ன செய்யப் போகின்றீர்கள்? எனது பங்கிற்கு நான் முடிவு செய்துவிட்டேன். ஈகம், கடும்துயர், தீவிரப் போர் என்கிற செயற்பாடுகள் மூலமே விடுதலை வெல்லப்பட முடியும். இனிமேல் போராட்டமே எனது வாழ்வு.

அன்று மண்டேலா தென்னாபிரிக்க மக்களிக்காக மட்டும் இதனைக் கூறவில்லை. எமக்கும் சேர்த்தே கூறியிருக்கின்றார். ஏனெனில் தமிழீழ மக்கள் உட்பட அனைத்து நசுக்கப்படும் உலக மக்களுக்காகவும் இன்னும் அழுத்தங்கட்கு அடிபணியாமல் குரல் கொடுப்பவர் அவர். மேலும் மண்டேலா தொடர்கிறார்: 'எந்தத் தேசத்தின் வரலாற்று வாழ்விலும் நேரமொன்று வரும். அப்போது இரண்டு வழிகளே மீதமிருக்கும். சரணடைவதா? அல்லது சமராடுவதா? இப்போது அந்த நேரம் தென்னாபிரிக்காவுக்கு வந்துவிட்டது. நாங்கள் சரணடையோம். எங்களுக்கு வேறு தெரிவேதுமில்லை. எங்கள் மக்களுக்காக, எங்கள் எதிர்காலத்திற்காக, எங்கள் விடுதலைக்காக எங்கள் முழு வலுவினையும் திரட்டி திருப்பி மிகக் கடுமையாகத் தாக்குவோம். இப்போது தமிழீழ தேசத்திற்கும் மண்டேலா உரைத்த அந்த நேரம் வந்துவிட்டது. வரலாற்றில் ஆயிரத்துக்கொருமுறை வரும் வாய்ப்பு.

போராட்டமே இனி எனது வாழ்வு என்றார் நெல்சன் மண்டேலா. எமது மக்களிற்கு வாழ்வே போராட்டமாகவும் போராட்டமே வாழ்வாகவும் மாறிவிட்டது என்றார் எம் தலைவர். இவற்றின் பொருள் என்ன? இனி நாம் செய்ய வேண்டியதுதான் என்ன? *இறந்த கால வரலாற்றினை வைத்து நிகழ்காலம் எப்படி இருக்கும் எனக்கூற முடியும். நிகழ்கால வரலாற்றினை வைத்து எதிர்காலம் எப்படியிருக்கும் எனக் கணிக்க முடியும் என்றவர் மாவோ.* தமிழீழ மக்களின் இறந்தகால வரலாற்றினை புரட்டிப் பார்க்கும் போது ஏன் நிகழ்காலம் கீழ் நிலையிலிருக்கின்றது என்பதற்கான காரணத்தைத் தெளிவாகவே புரிய முடிகின்றது. அதுபோலவே நிகழ் கால வரலாற்றினை அவதானிக்கும் போது தமிழினத்தின் எதிர்காலம் எவ்வாறு சீரும் சிறப்புமாக ஒளிமயமாக இருக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடிகின்றது. எனவே தமிழீழ மக்கள் தெளிவான வரலாற்று அறிவினைக் கொண்ட அரசியல் விழிப்புணர்வுள்ள மக்களாக மாறவேண்டியது வரலாற்று நியதி யாகின்றது.

ஏனெனில் 21ஆம் நூற்றாண்டின் இணையற்ற பொருண்மிய வல்லரசாக சீனா உருவாகும் என அடித்துக்கூறும் ஆய்வாளர்கள் அனைவருமே சீனாவின் வளர்ச்சிக்குக் கூறும் பிரதான காரணம், ஆசியாவிலேயே வரலாற்று அறிவு விழிப்புணர்வு கொண்ட மக்கள் சீனரே என்பதாகும். தமது வரலாற்றை வரன் முறையாகத் தொகுத்து சிறந்த வரலாற்றாளராக சீனர் விளங்குகின்றனர். இன்று மரணப் படுக்கையிலிருக்கும் சீன முதியோர்கள் கூட ஜப்பான் சீனாவை ஆக்கிரமித்தபோது நிகழ்த்தப்பட்ட படுபாதகங்களை மறக்கவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அதிகாரத்துக்கு எதிரான போராட்டம் என்பது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் என்பது செக்கோசிலோவியா எழுத்தாளர் மியான் குந்த்ராவின் வாசகம். நினைவுகள் இறக்கும்போது மனிதன் உயிர்ப்பற்ற பிணமாகி விடுகின்றான் என்கிறார் புலம்பெயர்ந்த அறிஞர் யமுனா ராஜேந்திரன். அவர் தொடர்ந்து எழுதுகிறார்.

'இந்த நினைவுகளை உயிர்ப்பித்துக் கொள்வது ஒரு போராட்டம்தான். புதிய மனிதனுக்கான போராட்டம். நினைவுகள் காலணி (குடியேற்ற) ஆதிக்க வடுக்களையும் சுமந்து கொண்டிருக்கின்றன. தாய்நாட்டில் நடந்த இரத்தம் சிந்தப் பட்டதையும் ஒடுக்குமுறையையும் நினைவுகள் சுமந்திருக்கின்றன.' இதுவே எம் மக்களுக்கான இன்றைய செய்தி. எதனை எம் மக்கள் மீள் நினைவு கொள்ள வேண்டும்? எதனை இரைமீட்டுப் பார்க்க வேண்டும்?

## நினைவு ஒன்று - 2300 ஆண்டுகளிற்கு முன்

'பூநகரிப் பிராந்தியத்திலுள்ள வெட்டுக்காடு, பரமன்கிராய், பள்ளிக்குடா, மண்ணித்தலை, பல்லவராயன்கட்டு, ஈழஊர், பாலாவி, வீரபாண்டியன்முனை ஆகிய இடங்களில் இடைக் கற்காலப் பண்பாட்டின் (கி.மு. 25,000 வருடங்கள்) தொடர்ச்சியான பெருங்




கற்காலப் பண்பாடு நிலவி வந்துள்ளது. இதற்குச் சான்றாக பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள், தாழிகளின் உடைந்த பாகங்கள், இரும்பாயுதங்கள், கருவிகள், மணிகள், எலும்பினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள், அகல் விளக்குகள், ஓவியந் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள், சுடுமண் பாவைகள் கிடைத்துள்ளன. இச் சான்று 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட செறிவான திராவிடர் குடியேற்றங்கள் இங்கிருந்ததற்கு சான்று பகர்கின்றன. (நன்றி – புராதன தமிழ்க் குடியிருப்புக்கள், ப. புஸ்பரத்தினம், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)



## நினைவு இரண்டு 28-ஒக்ரோபர்-1591

'ஊர்காவற்துறையூடாக யாழ்ப்பாணக் கடலேரிக்குள் போர்த்துக்கேயப் பறங்கிகளின் போர்க் கலங்கள்

www.tamilarangam.net



# நினைவுகள் ......

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூரைக் குற ிவைத்துப் பிரவேசித்தன. 43 மரக்கலங்கள், 250 வள்ளங்கள்..... பக்கத்திற்கு 5 பீரங்கிகள் பொருத்தப்பட்ட பெரிய மரக் கலங்களிலிருந்து துவக்குகள் ஏந்திய வீரர்களைக் கொண்ட வள்ளங்கள் வரை அம் மரக்கலத் தொகுதி யிலிருந்தன. போர்த்துக்கேயப் படை கரையிறங்கியது. யாழ்ப்பாண மன்னன் புவிராச பண்டாரம் பரராசசேகரன் தனது வீரர்களுடன் போரிட்டான். இறுதியாக தமிழர் படை களப்பலியாகியது. யாழ்ப்பாண அரசனைக் கைது செய்து போர்த்துக்கேயத் தளபதி அவனது சிரசைக் கொய்து ஈட்டியில் குத்தி நிறுத்தி வைத்தான் (நன்றி – நீலவண்ணன், களம் பல கண்ட கோட்டை)

## நினைவு மூன்று
## 30 ஒக்ரோபர் - 1803

"வன்னி நாட்டின் இறுதி மன்னனாகத் திகழ்ந்த குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன், ஒல்லாந்தர் கால இறுதியிலும் பிரித்தானியக் கால ஆரம்பத்திலும் வன்னிப் பிரதேசத்தை ஆண்டான். ஒல்லாந்தருக்கும் பிரித்தானியருக்கும் எதிராக தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறான். ஒல்லாந்தர் திறைக் கோரிக்கையை நிராகரித் திருக்கிறான். 1803 ஒக்ரோபர் 23இல் பிரித்தானிய கூலிப்படையிலிருந்த டச்சுத் தளபதி கப்டன் வொன் டிறிபேக் கற்சிலைமடுவில் பண்டார வன்னியனை தோற்கடித்தான்" (நன்றி – வெளிச்சம், முல்லைமணி, மண்ணின் சுதந்திரம் காத்த முள்ளியவளை வன்னியர்கள்)

## நினைவு நான்கு
## 7 டிசம்பர் - 1918


ஜேம்ஸ் பீரிஸ், பி.ஜே. சமரவிக்கிரம என்னும் இரண்டு சிங்களத் தலைவர்களும் யாழ்ப்பாணம் வந்து சேர்.பொன். அருணாசலத்திடம் எழுத்து மூலமானதொரு உறுதி மொழியை வழங்கினர். மேற்கு மாகாணத்தில் வசித்த தமிழருக்கு சட்டசபையின் ஒரு தொகுதியை ஒதுக்கித் தருவோம் என்பதுதான் அந்த உறுதிமொழி. பின்னர் இந்த உறுதிமொழி காற்றில் பறக்க விடப்பட்டது. அருணாசலம் மிகவும் ஏமாற்றப்பட்டவராக உணர்ந்தார்.

## நினைவு ஐந்து
## - 1956 யூன்

காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தந்தை செல்வா

வென்றபின் – "எனது மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் நான் சொல்ல விரும்புவது இதுதான். இந்த

ஆணையாக நான் கருதுகின்றேன். தமிழ் ஈழ தேசம் தன்னிடத்திலே பார ப்படுத்தப்பட்டிருக்கும் தன்னாட்சி



தேர்தல் முடிவினை ஒரு மக்கள் யுரிமையை பிரயோகித்து தமிழ்

மக்கள் விடுதலை பெறுவதற்கான மக்கள் ஆணையே இது. தமிழர் ஐக்கிய முன்னணி சார்பில் நான் இந்த மக்கள் ஆணையை முன்னெடுத்துச் செல்வேன் என உத்தரவாதம் அளிக்கிறேன்."

இப்போது நடப்பு நிலை. அண்மைக்கால ஆசிய வரலாற்றில் மிக நீண்ட போராகக் கணிக்கப்படும் 'ஜெயசிக்குறு' வுக்கு எதிராக புலிகளின் தடுப்புத் தாக்குதலும் நிறைந்த எதிர்ப்பு இவ்வாண்டு மே மாதத்துடன் இரண்டாவது ஆண்டை ஆரம்பி த்துள்ளது.

அதாவது, தமிழரின் புதிய புத்தாண்டு ஆரம்பிக்கும் நாள் இனிமேல் மே 13. ★

# வெளிவராத வார்த்தைகள்

நான் இருப்பது
சான்கு சுவர்களுக்குள்
கதவுகளை தள்ளிப் பார்க்கிறேன்
சுவர்களை மோதிப் பார்க்கிறேன்
பலனில்லை – உடலில்
பலமில்லை!
என் உரிமைகள்
பறிக்கப்பட்டு விட்டன!
நான் இருக்க வேண்டிய கதிரையில்
யாரோ ஒருவன்
இன்னொருவன் வாயில்
என் உணவு
என் ஆடைகள் அரையில் மட்டும்தான்
என் கைகளையும்
கால்களையும் – விலங்குகள்தானே
காதலிக்கின்றன.
என் இருப்பிடத்திற்கு
பறவைகள் எவையும் வருவதில்லை.
குயில்கள்
வந்துவிட்டு
கூவாமலே திரும்பிப்போய் விடுகின்றன.
இங்குள்ள மரங்களில்
இலைகள் இல்லை
பூக்கள்
குறைமாதத்தில் பிறந்த
குழந்தைகள் போல் மலராமலேயே
விழுந்துவிடுகின்றன.
நான் வெளிச்சம் காண்பதே
குறைவு.
இப்போது எத்தனை மணி என்பதுகூட
எனக்குத் தெரியாது.
என் காதுகளுக்கு கேட்கும்
ஒரே ஓசை
கதவு திறக்கும் கீச்சிடல்.
என்னோடு இங்கே இருப்பது
சிலந்திகளும் வௌவால்களும் பல்லிகளும்தான்.
நான் படுக்குமிடத்திற்கு
பத்தடி தூரத்தில்தான்
என் மலம் கழிக்குமிடம்.
ஏனென்று கூறாமலே என்னை அடிக்கிறார்கள்.
இவர்களின் அடியால்
வடிவது கண்ணீர் மட்டுமல்ல
செந்நீரும்தான்.
என் உறவுகள் என்னைக் கண்டால்
இலகுவில்
இனம் காணமாட்டார்கள்.
ஏனென்றால்
என் முகமும்
மூட்டுக்களும் முதுகெலும்பும்கூட
முன்னைய நிலையில் இல்லை.
என் அவஸ்தைகளில் இவர்கள்
ஆனந்தம் அடைகின்றனர்.
இவர்கள் மனிதப்பிறப்புக்கள்
இல்லை.
பிரேதப்பெட்டிக்குள் கிடக்கும்
சவம் மாதிரி
இந்த சீமெந்துப் பெட்டிக்குள் – நான்



சிறைப்பட்டுக் கிடக்கிறேன்.
நான் யாருடைய உரிமையையும்
பிடுங்கவில்லை.
யாரையும் கொலை செய்யவுமில்லை
எனக்குத் தீர்ப்பளித்தது யார்
நான் என்ன ஆயுள் கைதியா?
இந்த நான்கு சுவர்களுக்குள் வைத்தே
எனது இறுதி மூச்சை – இவர்கள்
எடுத்து விடப்போகின்றார்களா?
நான் செய்த குற்றம் என்னவென்று
கடைசியாக ஒருமுறைகு
காதுகிழியக் கத்தினேன்.
பதில் வந்தது – 'நீ தமிழன்'

எழுதியவர் – ஏ. நிசாந்தன்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 11



மார்ஷல் சுயிக்கோவ்

அக்டோபர் மாதத்தின் இரண்டாவது பாதியில் நகரத்தில் நிலவரம் சிக்கலாயிற்று, முன்னணிக்கும் வோல்காவிற்கும் இடையிலிருந்த தூரம் மிகவும் குறைந்ததால், படையின் யுத்த கவுன்சில் வீணான இழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு ஒரு சில பிரிவுகளையும் அமைப்புகளையும் இடது கரைக்கு மாற்றும்படி நேரிட்டது. முதலில் பெண்களை இடது கரைக்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. இடது கரைக்குச் சென்று ஓய்வெடுத்து, ஒரு சில நாட்களுக்குப் பின் திரும்பி வருமாறு பெண்களுக்கு சொல்லும்படி கமாண்டர்களுக்கும் மேலாளர்களுக்கும் கட்டளையிடப்பட்டது.

யுத்த கவுன்சில் அக்டோபர் 17ம் திகதி இம்முடிவை எடுத்தது. 18ஆம் திகதி காலை தகவல் தொடர்பு வீராங்க னைகளின் தூதுக்குழு ஒன்று வாலியா தோக்கரெவாவின் தலைமையில் என் னிடம் வந்தது. அவர் நேரடியாக, ஒளிவுமறைவின்றி தம் கருத்தை வெளியிட்டார்.

"தோழர் தளபதி அவர்களே, ஏன் எங்களை நகரத்திலிருந்து வெளியில் அனுப்புகின்றீர்கள்? மாண்டால் எல்லோருடனும் சேர்ந்து மாள்வோம் அல்லது ஜென்ம விரோதியை எல்லோருமாகச் சேர்ந்து ஒழித்துக் கட்டுவோம். ஆண்கள் பெண்கள் என்று ஏன் நீங்கள் பிரிக்கின்றீர்கள்? நாங்கள் எந்த விதத்தில் அவர்களுக்குக் குறைந்து விட்டோம்? நீங்கள் என்ன சொன்னாலும் சரி, நாங்கள் மறு கரைக்குப் போகப் போவதில்லை."

இந்தப் பேச்சு அக்டோபர் 18 ஆம் திகதி, அதாவது நாங்கள் புதிய கட்டளை மையத்திற்கு இடம் மாறிக் கொண்டிருந்தபோது நடந்தது. எனவே, புதிய கட்டளை மையத்தில் எல்லா தகவல் தொடர்பு சாதனங்களையும் வைக்க முடியாது. எளிய, இடம் விட்டு இடம் மாற்ற வல்ல கம்பியில்லாத் தொலைபேசி சாதனங்களைப் பயன் படுத்துமாறு நிலவரம் கோருகிறது. அதனால்தான் கனமான தகவல் தொடர்பு சாதனங்களுக்கான இடம் தயாராகும் வரை அவர்களை நான் இடது கரைக்கு அனுப்புவதாகக் கூறினேன்.



அப்பெண்கள் யுத்த கவுன்சிலின் முடிவை நிறைவேற்ற ஒப்புக் கொண்டனர். ஆனால், அவர்களுடைய வேலைக்கேற்ற ஏற்பாடுகள் தயாரானதும் அவர்களைத் திரும்பவும் வலது கரைக்குக் கொண்டு வருவதாக நான் உண்மையாக வாக்களிக்க வேண்டுமெனக் கோரினர்.

அக்டோபர் 18ஆம் திகதி அவர்கள் மறு கரைக்குச் சென்றனர். அக்டோபர் 20 முதல் கிரிலோவ், கூரவ் அல்லது நான் இடது கரையுடன் தொலைபேசித் தொடர்பு கொண்ட போதெல்லாம் அப்பெண்கள் எங்களைத் துளைத் தெடுத்தனர்: "நாங்கள் இங்கு ஓய்வெடுத்தாகிவிட்டது. எப்போது நகரத்திற்குள் வர விடுவீர்கள் அல்லது "தோழர் தளபதி அவர்களே, உங்களுடைய வாக்கை எப்போது நிறைவேற்றப் போகின்றீர்கள்?" என்று கேட்ட வண்ணமிருந்தனர். நாங்கள் எங்கள் வாக்கை நிறைவேற்றினோம். அக்டோபர் இறுதியில் அப் பெண்களையும் அவர்களுடைய தகவல் தொடர்பு சாதனங்களையும் தயாரான பதுங்கிடங்களுக்கு அழைத்து வந்தோம்.

....ஸ்டாலின்கிராட்டில் சிறப்பாகச் செயல்பட்ட வேவு வீராங்கனைகள் விதினேயெவா மரீயா, கரேல்வா லீஸா, மத்தோரினா மரீயா போன்றவர்களை என்னால் மறக்க முடியாது. முன்னணியைக் கடந்து எதிரியின் பின்புறத்தை அடைவதற்காக இவர்கள் இடிபாடுகள், நிலவறைகள், மேடு பள்ளங்கள், தண்ணீர்க் குழாய்கள் ஆகியவற்றின் ஊடாகப் பன்முறை செல்ல வேண்டியிருந்தது.

ஒரு வேவு வீராங்கனை எதிரியின் பின்னணியில் செயல்பட்டதைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்: "செப்டெம்பர் மாதத்தில் ஒரு நாள் நானும் என் தோழி லீஸா கரேலாவும் பாசிஸ்டுகளின் பின்னணிக்குச் சென்று வேவு பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தோம். எங்களை வோல்காவின் கரையிலிருந்த பதுங்கிடத்திற்கு அழைத்து, பின்னணியில் நாங்கள் என்ன செய்ய வேண்டும், எதன் மீதெல்லாம் கவனம் செலுத்த வேண்டுமென நன்கு விளக்கினர்.

"தலைமையகங்கள் எங்குள்ளன, பாசிசத் துருப்புகள் எங்கு நிற்கின்றன, பீரங்கிகள் எங்குள்ளன, உள்ளூர் மக்களை எதிரி எங்கு அழைத்துச் செல்கிறான், தானியக்கிடங்கில் என்ன நடக்கிறது போன்றவற்றை அறிய வேண்டும், விஷ்னேவாய பள்ளத்திற்குச் செல்ல வேண்டும் என்று எங்களுக்குக் கூறினர்.

"செப்டெம்பர் மாத இரவு ஒன்றில் நாங்கள் 'பாவ்லவ் வீட்டிலிருந்து' வெளியே வந்தோம். ஜனவரி 9 சதுக்கத்தை எங்கே கடப்பதென எங்களுடன் கூட வந்த வலோத்திய பிமெனவ் சுட்டிக் காட்டினார். நாங்கள் கவனமாக அச்சதுக்கத்தைக் கடந்து சாலை சந்திப்பில் இடிபாடுகளிலிருந்த ஒரு மாடிக் கட்டிடம் வரை சென்று, இரவு அங்கேயே தங்கினோம்.

"மறுநாள் காலை நகரத்தில் அங்குமிங்கும் சென்று, எங்களுக்கு இடப்பட்ட கட்டளைகளின் நிறை வேற்றத்தில் இறங்கினோம். ஜெர்மானிய இராணுவத் தலைமைக் காரியாலயத்தை அடைந்தோம். அங்கு பெரும் மக்கள் கூட்டம் இருந்தது. நகர வாசிகளை தோன் ஆற்றின் கரையிலுள்ள கலாச்சிக்கு அனுப்பப் போவதை அவர்களிடமிருந்து அறிந்தோம். புஷ்கின் சாலையில் ஒரு வீட்டின் முன் நிறைய கார்கள் நின்றன. பாசிச இராணுவ அதிகாரிகள் அதனுள் போய் வந்து கொண்டிருந்தனர். அந்த வீட்டை நன்கு நினைவில் வைத்துக் கொண்டோம். அதுதான் டிவிஷன் தலைமையகமாயிருந்தது. சூர்ஸ்கயா நீராவிக் குளியலறைக்கு சனிக்கிழமைதோறும் பாசிச இராணுவ அதிகாரிகள் குளிக்க வருவதை அறிந்தோம். இதையும் கவனமாகக் குறித்துக் கொண்டோம். புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் வழியில் நாங்கள் நகர வாசிகளைச் சந்தித்தோம். மாலையில் தாக்குதலில் இறங்க பாசிஸ்டுகள் தயாராவதாக அவர்களிடமிருந்து அறிந்தோம்.

"நாங்கள் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்க முடிவு செய்தோம். ஆனால், பாசிஸ்டுகள் எங்களை அங்கு விடவில்லை. தானியக் கிடங்கு இருந்த இடத்திற்கு வந்தபோது, பாசிஸ்டுகள் நாள்தோறும் ரயில்களிலும் லாரிகளிலும் தானியத்தை ஏற்றிச் செல்வதை அறிந்தோம். விஷ்னேவயா பள்ளத்திற்குச் செல்லும் வழியில் கிராஸ்னி அக்தியாபர் குடியிருப்பின் அருகே சுடுமிடங்களைக் கண்டோம். அனால், அவை தண்டவாளங்களுடன் புதியவையாக இருந்தன; அவற்றின் அருகே ஆறு துவாரங்களையுடைய பீரங்கிகள் நின்றன. கிராஸ்னி அக்தியாபர் குடியிருப்பில் ஏராளமான பாசிஸ்டுகள் இருந்தனர். குடியிருப்பிற்குள் செல்ல அவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை.

"இந்த விபரங்களையெல்லாம் சொன்னபடி இரண்டு நாள்களில் சேகரித்துக் கொண்டு, யாரும் பார்க்காமல், ஜனவரி 9 சதுக்கத்தை நெருங்கி, அதன் வழியே சென்று, 'பாவ்லவ் வீட்டின்' அருகிலிருந்த அரவை மில்லை அடைந்தோம். நாங்கள் திரும்பி வந்ததில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. எங்களை உடனடியாக நிலவறையிலிருந்த தலைமையகத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே நாங்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறினோம். பின்னர் எங்களை பதுங்கிடத்தின் வழியே சலியனாயா சாலைக்கு அப்பால் அழைத்துச் சென்றனர். அங்கு நாங்கள் கமாண்டரைச் சந்தித்தோம். நாங்கள் கூறுவதையெல்லாம் கவனமாகக் கேட்ட அவர் வரைபடத்தில் ஏதோ குறித்துக் கொண்டார்..."

ஒரேயொரு தகவலிலிருந்து (இரண்டு பெண்களிடமிருந்து) கிட்டிய விவரங்கள் சிறு, நடைமுறைத் தந்திர முக்கியத்துவம் வாய்ந்தவையாக மட்டுமே இருந்தன. இவற்றிற்கு எவ்வித செயல்தந்திர முக்கியத்துவமோ, போர்த்தந்திர முக்கியத்துவமோ இல்லையென்று சிலர் கூறக்கூடும். இப்படிப்பட்ட தகவல்களும் வேறு வேவு முறைகளும் 62வது படையிடம் நிறைய இருந்தன. நாளை, அடுத்த சில நாட்களில் எங்களை என்ன எதிர்நோக்கியுள்ளது என்று அறிவதற்காக நாங்கள் எதிரியின் பின்னணியிலிருந்து தகவல்களைச் சேகரிக்க முயன்றோம். வோல்காவின் கரையோரமாக பல டஜின் கிலோ மீட்டர்களும், 3–5 கி.மீ. ஆழத்திலும் விரிந்து பரந்த நகரத்தைப் பாதுகாத்து நின்ற எங்களுக்கு, தற்காப்பின் முன் எல்லைக்குப் பின்னால் அருகிலுள்ள எதிரியின் பின்னணியில் என்ன நடக்கிறது என்பதை அறிவது பெரிதும் முக்கியமானதாயிருந்தது.

வேறு வழிகளிலும் இத்தகைய வேவு விவரங்கள் படைத்தலைமைக்குக் கிட்டின. இவற்றின் அடிப்படையில் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கித் தாக்குதல்கள், "கத்யூஷா" ர்ராக்கெட் பீரங்கித் தாக்குதல்கள் ஆகியவற்றால் ஒருசில எதிரி ரெஜிமென்டுகள், டிவிஷன்களின் தலைமையகங்களை அழித்து சீர்குலைக்க முடிந்தது. எதிரியின் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் இருந்த இடங்களைத் தாக்கி அழிக்க முடிந்தது. அவற்றின் அருகேயிருந்த ஆயுதக் கிடங்குகளை நாசம் செய்ய முடிந்தது. எதிரி குவிந்திருந்த இடங்கள், தாக்குதலில் இறங்கத் தயாராயிருந்த எதிரித் துருப்புகள் ஆகியவற்றின் மீது குண்டு வீச எங்களுடைய இரவு நேர விமானங்களுக்குத் தகவல் வழங்கி உதவ முடிந்தது. தகவல் தொடர்பு என்பது நரம்பு மண்டலத்திற்கு ஒப்பானது. தகவல் தொடர்பின்றி நவீன யுத்தத்தில் துருப்புகளை நிர்வகிக்க முடியாது.

வோல்காவின் கரையில் நடந்த சண்டையின் போது தகவல் தொடர்பிற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஏனெனில் நகரத்தின் தற்காப்பு இதன் திட்டவட்டமான, இடையறாப் பணியைப் பொறுத்திருந்தது.

**தொடரும்......**

www.tamilarangam.net



# மாகாணசபைத் தேர்தலுக்கான திகதி ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டதேன்?

இக்கட்டுரை வன்னியிலிருந்து வெளிவரும் "ஈழநாதம்" பத்திரிகையில் கடந்த மாதம் வெளிவந்திருந்தது. கட்டுரையாளர் இக்கட்டுரையில் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்ததுபோல் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நாடு பூராகவும் அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தி மாகாணசபைத் தேர்தலை காலவரையின்றி அண்மையில் பிற்போட்டுள்ளார். ஆகவே அரசியல் நோக்கர்கள் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டபோது கூறிய எதிர்வு கூறல் அப்படியே உண்மையாகியுள்ளதை இக்கட்டுரை மூலம் நீங்கள் உணரக்கூடியதாகவுள்ளது.

சிறிலங்காவில் 5 மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுமா? அன்றி ஒத்திவைக்கப்படுமா? என நிலவிய பலத்த சந்தேகங்களுக்கு மத்தியில் இத்தேர்தல் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இதன்மூலம் தேர்தல் இடம்பெறும் என்ற நம்பிக்கை அளிக்கப்பட்டாலும் தேர்தல் இதன் பின்னரும் ஒத்தி வைக்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பலமான சந்தேகங்களும் இருக்கத்தான் செய்கிறது.

இதற்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் எடுத்த பகீரத முயற்சியும் அரசாங்க தரப்பின் மத்தியில் இது குறித்து உள்ள கருத்து வேறுபாடுகளுமே காரணமாகும். குறிப்பாக மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும் இடையிலே கருத்து ஒருமைப்பாடு இல்லையென தகவல்கள் வெளியாகியுள்ளன. சந்திரிகா குமாரதுங்கா தேர்தலை எதிர்கொள்ள வேண்டியதே என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்ததாகவும் ஆகையினால் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு ஒரு பொருத்தமான சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே ஒத்திவைக்க விரும்புவதாகவும் கருதப்படுகின்றது. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தயோ தேர்தலை இவ்வாண்டின் இறுதியிலோ அன்றி அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ நடத்தலாம் என்பதே அவரின் முடிவாக உள்ளது.

சந்திரிகா குமாரதுங்க தேர்தல் வெற்றியின் ஓரளவு நம்பிக்கை கொண்டிருப்பது அவரது முடிவுக்கு காரணமாக இருக்கலாம் போல் தெரிகின்றது. அவ்வாறு தேர்தல் வெற்றியில் அவர் நம்பிக்கை கொண்டிராது விட்டால் ரணில் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலைக் காண்பதானால்

**– ஜெயராஜ் –**
**(தமிழீழம்)**

மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்கத் தயாரென விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டு அமைச்சர் பீரிஸ் மூலம் சவால் விட்டிருக்கமாட்டார்.

ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தவும் சில சிரேட்ட அமைச்சர்களும் ஜனாதிபதித் தேர்தலை நவம்பரிலோ அன்றி மாகாண சபைத் தேர்தலை ஆகஸ்ட்டிலோ நடத்துவதை விரும்பவில்லை என்பதே உண்மையாகும். ஆகையினால் தான் ஆரம்பத்தில் ரணில் விட்ட சவாலை ஏற்ற சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து பின்வாங்கினார்.

ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக பின்வாங்கத் தயாராக இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. இருப்பினும் இத்தேர்தல் திட்டமிட்டவாறு நடக்குமா என்பது குறித்து தற்பொழுது எதையும் உறுதியாக கூறிவிட முடியாது.

ஏனெனில் தேர்தலானது தற்பொழுது அறிவிப்புச் செய்தபடி நடக்குமானால் சந்திரிகா குமாரதுங்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையினதோ அன்றி சிரேட்ட அமைச்சர்களினதோ பேச்சுக்களை செவிமடுக்கவும் நம்பிக்கை கொண்டிருக்க வில்லை என்றே கருதப்பட வாய்ப்பு உண்டு.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவோ பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் யுத்தம் குறித்த கால நிர்ணயத்தை ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. அவ்வாறு நம்பிக்கை கொண்டவராக இருப்பின் தேர்தலை ஒத்திவைப்பதற்கான அறிவிப்பை அவர் முன்னதாகவே செய்திருப்பார்.

இந்நிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் வாக்குறுதியானது நடைமுறைச் சாத்தியமானது என ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றே கூறலாம். இதற்கு கடந்த காலத்தில் அமைச்சர் ரத்வத்த யுத்தம் குறித்து கொடுத்த வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றாமை காரணமாக இருக்கலாம். அல்லது யுத்தத்தின் போக்கை அவதானிப்பதன் மூலம் யுத்தம் விரைவில் முடிவுக்கு வரும் சாத்தியம் இல்லாதிருப்பதை அவர் புரிந்து கொண்டிருக்கலாம்.

இவ்வாறு யுத்தத்தின் வெற்றியில் நம்பிக்கை அற்றிருப்பதோடு மட்டுமல்ல மற்றுமொரு காரணியும் ரத்வத்தையின்

நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா புறந்தள்ளுவதற்கு

அடிப்படையாக இருக்குமோ என அரசியல் நோக்கர்கள் சந்தேகிக்கின்றனர். அதாவது அநுரா பண்டாரநாயக்கா

மீண்டும் சுதந்திரகட்சிக்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதினால், ரத்வத்தையின் வளர்ச்சி–செல்வாக்கு

என்பனவற்றை மட்டுபடுத்தும்வகையில் சந்திரிகா குமாரதுங்க காய்களை நகர்த்துகின்றாரா என்ற சந்தேகம்

கொள்கின்றனர்.

இதேசமயம் யுத்தத்தை ஜயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்தபின்னர் தேர்தல் நடத்தப்பட்டு அதில் வெற்றிஈட்டப்படுமானால் அவ்வெற்றியில் ரத்வத்தை உரிமை கோருவதற்குப் பெரும் வாய்ப்புண்டு. ஏற்கனவே அமைச்சர் ரத்வத்தை அடுத்த பிரதமருக்கான பதவிப் போட்டியில் இறங்கியுள்ளார். இந்த நிலையில் ஜயசிக்குறு முடித்துவைக்கப்படின் அவரின் செல்வாக்கு வளர்ச்சி அடைவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இது ஜனாதிபதி சந்திரிகாவிற்கு சிலசமயம் புதிய தலைவலியை உருவாக்கவும் கூடும்.

இதேசமயம் யுத்தத்திற்கு அப்பாற்பட்ட ரீதியில் உள்ள அரசியற் சூழ்நிலையிலும் சந்திரிகா குமாதுங்கா ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. இன்று எதிர்கட்சியான ஐ.தே கட்சி உட்கட்சிப்பூசலினால் பெரிதும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

கருதுவதாகத் தெரிகின்றது. அதாவது விஜயபால மெண்டிஸின் விவகாரம், அனுரா பண்டாரநாயக்காவின் குழப்பம், ஹமீத் முகமத் போன்றோரின் அதிருப்தி என்பன ஐ.தே.க. வாக்கு வங்கியைப் பாதிக்கும் என அவர் எண்ணக்கூடும். இதேசமயம் இம்முரண்பாட்டை மேலும்

தீவிரமாக்கும் வகையில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்களையும் ஆளும் கட்சி வெகுவாகப் பயன்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதும் வெளிப்படையாக உணரக்கூடியதாக உள்ளது.



இதற்கு அவர்கள் ஆரம்பத்தில் மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு சந்திரிகாவின் வெளிப்படையான ஆதரவு இருந்ததைச் சுட்டிக்காட்டுவதோடு, பின்னர் சந்திரிகா குமாரதுங்க மாகாணசபைத் தேர்தலுக்கான திகதியை அறிவுப்புச் செய்ய அனுமதித்தமையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்பொழுது கூட்டு நடவடிக்கைப் படைத் தலைமையகம் இருக்கின்ற போதிலும் புதியதொரு கட்டளைப் பீடத்தை உருவாக்குவதென்பது சந்திரிக்கா குமாரதுங்க தற்போதைய அமைப்பின் மீது பெரியளவில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதை வெளிக்காட்டும் ஒன்றாகவே கருத இடமுண்டு.

ஆனால் சந்திரிகா குமாரதுங்காவின் நிலைப்பாடும் அவரது வாக்குறுதியும் முற்றிலுமாக நம்பகத் தன்மை கொண்டதா என்றால் இல்லை என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில் சந்திரிகா குமாரதுங்க பலவாக்குறுதியை வழங்கியே ஆட்சிக்கு வந்தவர். ஆயினும் அவர் அவற்றை நிறைவேற்றவில்லை.

அதாவது யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வருவோம்– நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்போம் என வாக்குறுதியை அளித்து பாராளு மன்றத்தைக் கைப்பற்றி அதன் பின்னர் ஜனாதிபதியாகவும் வெற்றி பெற்றவர். ஆனால் ஆட்சிஅதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவே இல்லை. மாறாக, யுத்தத்தில் தீவிரம் காட்டுவதோடு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு? எப்படி? எதிர்கொள்வது பற்றியே சந்திரிகா குமாரதுங்க சிந்தித்து வருவதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில் ஆகஸ்ட் 28 நடைபெறும் என அறிவிக்கப்பட்ட தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட மாட்டாது என்று முற்றுமுழுதாக எதிர்பார்ப்பதற்கும் இல்லை. ஏனெனில் தேர்தல் தோல்வி என்பது உறுதியாக உணரப்பட்டால் தேர்தலை ஒத்திவைப்பதற்குச் சந்திரிகா குமாரதுங்க

தயக்கமின்றி இணங்கக்கூடும். ஏனெனில் அவர்கள் தமது பதவிகளை இலகுவில் துறப்பதற்கு தயாராக இல்லை.

இந்த வகையில் பார்க்கையில் சந்திரிகா குமாரதுங்க தேர்தல் குறித்த திகதியை அறிவிக்கத் தயாரானமைக்கு பின்வருவனவற்றில் ஏதோ ஒரு காரணி முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும்.

இவ்வாண்டின் இறுதியில் தேர்தல் நடத்துவதை விட தற்போது தேர்தல் நடத்துவதானது ஓரளவேனும் அனுகூலமாக இருக்கும் என சந்திரிகா குமாரதுங்க கருதியிருக்க வேண்டும்.

தேர்தலை ஒத்தி வைப்பதற்கான பொருத்தமான காரணமோ அன்றி காலமோ இதுவல்ல என ஜனபதி சந்திரிகா முடிவு செய்திருக்க வேண்டும். அதாவது, தேர்தலை ஒத்தி வைப்பதற்கு எதிராகப் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ள நிலையிலும் சார்க் மாநாடு நடைபெறவுள்ள நிலையிலும் தேர்தலை ஒத்தி வைப்பதானது தமது அரசாங்கத்திற்கு அபகீர்த்திகளை உண்டுபண்ணும் என ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருக்கக் கூடும்.

தேர்தலை ஒத்தி வைக்கச் சிறிது காலதாமதத்தின் பின் அறிவிப்புச் செய்யலாம் என சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருக்க முடியும். அதாவது ஆகஸ்ட் மாதத்தில் நாடு பூராவும் அவசரகால சட்டத்தைப் பிரகடனம் செய்த பின்னர் ஒத்திவைப்பை அறிவிக்கலாம் என அவர் கருதியிருக்கலாம்.

இந்த வகையில் ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவு எதன் அடிப்படையிலானது ஆயினும்சரி இது பொ.ஐ.முன்னணியினதோ அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதோ ஒருமித்த கருத்தின் அடிப்படையிலானதாக இருக்க முடியாது. ஆகையினால் மாகாண சபைத் தேர்தல்கள் திட்டமிட்டவாறு ஆகஸ்ட் 28ல் நடைபெறுமா என்பதை தற்போது உறுதி செய்வது ஓர் அவசரமான முன்னறிவிப்பாகவே இருக்கும். ★

www.tamilarangam.net



# சிறுகதை




பிரதான வீதியில் ஏதோ ஒரு வாகனம் விரைந்து போவது துல்லியமாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து வேறும் ஏதாவது வாகனங்கள் இரைகிறதா? என செவிகளை கூர்மையாக்கி அவதானித்தாள் பாக்கியம். எதுவித அசுமாத்தமும் இன்றி வீதி அமைதியாய் இருந்தது.

ஏனோ இன்று தூக்கம் வராமல் மனது சுமையாய் இருந்தது. குளத்தடி வளவுப் பக்கமா மயூரனும் இன்னுமொரு பொடியனும் சைக்கிள்ளை போறான்கள்.

காலையில அம்மன் கோயிலுக்கு மாலை கட்டும் மணியம் பூப்பிடுங்க வந்தபோது சொன்னதுதான் நினைவில் உழன்றது.

மயூரன் அங்காலை நிற்பதாகத்தான் யாரோ சொன்னார்கள். ஆனால் மணியம் அவனைத் தன் கண்களால் கண்டதாகச் சொன்னபிறகு மனது குழம்பி அலைந்தது.

கொஞ்ச நேரத்திக்கு முதல் கேட்ட வாகனச் சத்தத்தின் பிறகு எதுவித ஓசையுமில்லை.

'இந்த ஊரில் மனித வாடையே இல்லையோ' என்று எண்ணுமளவிற்கு ஊர் அடங்கிப் போயிருந்தது.

ஜன்னல் கண்ணாடிகளுக்கு அப்பால் வெளியே நிலவு காலித்துக் கொண்டிருந்தது. நிலவு வெளிச்சத்தைப் பார்த்து கிளர்ச்சி கொண்டு ஊளையிடும் நாய்கள் கூட வாய் திறக்கவில்லை.

'வாற அமாவாசைக்கு அடுத்த நாள் தேப்பன்ர துவசம்... ஆரிட்டையும் சொல்லியெண்டாலும் விட வேணும்..' நினைவு சுரந்தது.

வழமையாக தகப்பனின் துவச நாளன்று நண்பர்களையும் கூட்டி வந்து பயூரன் உண்டுவிட்டுத்தான்



போவான் என்பதை நினைத்துப் பார்த்து மனம் நொந்தாள்.

கணவன் உயிரோடு இருந்த போதெல்லாம்,

'அவனை அவன்ர வழியில விட்டுவிடு' பாக்கியம் என்றுதான் சொல்லுவார். அவர் சொல்வதை தான் செயற்படுத்திவிட்டதாக இப்போது மனம் பூரித்தது அவளுக்கு.

வேலி ஓரமாக யாரோ நடந்து போவது போன்று காலடிச் சத்தங்கள் கேட்டன. பொருட்படுத்தாமல் கிடந்தாள்.

நேற்று முன்தினம் அதிகாலை.

ஜீப் ஒன்றில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி, பெற்றோர் எல்லோரையும் ஊர்ப் பாடசாலையில் ஒன்பது மணிக்கு கூடுமாறு அறிவித்தபடி சென்றது.

பாக்கியமும் போயிருந்தாள்.

எல்லோருக்கும் ரீயும் பிஸ்கட்டும் தரப்பட்டது. சீருடைகள் சிரித்துச் சிரித்து உபசரித்தது ஆச்சரியமாயிருந்தது அவளுக்கு.

நூற்றம்பது வரையான, வயதான இளமையான பெற்றோர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

தடதடவென நிலத்தை மிதித்தபடி அதிகாரி வந்தான். எல்லோரையும் பார்த்து கைகூப்பிவிட்டு அமர்ந்தான்.

அவனருகே இன்னொரு உத்தியோகத்தர் சாதாரண உடையுடன் இருந்தார்.

அதிகாரி அமர்ந்தபடியே பேசத் தொடங்கினான். ஒருவருக்கும் அவன் என்ன சொல்கிறான் என்று புரியவில்லை.

அதிகாரி பேச்சை நடுவே நிறுத்த – அருகே இருந்த உத்தியோகத்தர் அவன் சொன்னதை தமிழில் சொல்ல ஆரம்பித்தார்.....

'நாங்கள் உங்களுக்கு நல்லதுதான் செய்வோம். உங்களுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர நாங்கள் விரும்புகிறம். நீங்கள் யாரும் புலிகளை ஆதரிக்கக் கூடாது. அவர்களைக் கண்டால் எங்களுக்கு இனங்காட்ட வேண்டும். இல்லையெண்டால் என்ன நடக்கும் என்பது நான் சொல்ல வேண்டியதில்லை....'

ஒரு மணிநேரமாக அந்த அதிகாரி பேசியதன் சாராம்சம் இதுவாகத்தான் இருந்தது.

கூட்டம் முடிந்து எல்லோரையும் போலத்தான் பாக்கியமும் வந்தாள்.

'அவன் சொன்னதைக் கேட்டியே. எங்களுக்கேன் வீண் சோலிய... பெடியளைக் கண்டால் கதைபேச்சு வைக்காமல் போயிட்டா சரி.'

ஊர் பெரியவர் ஒருவர் சொல்லிக் கொண்டு வந்தார்.

'பாவம் அண்டு நாங்கள் நினைச்சு பெடியளுக்கு உதவினாலும் அவங்கள் மணந்து பிடிச்சிடுவான்கள்... பிறகு ஆர் தப்பிறது....?

பழைய நினைப்பிளந்தவளுக்கு பின்கதவு மெதுவாகத் தட்டப்படும் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டு காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்.

'அம்மா...'

மீண்டும் காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்.

'அம்.. மா..'

பின்கதவடியில்தான் குரல் கேட்டது. மெதுவாகக் கண்களை முழித்துப் பார்த்தாள்.

சுவர் முனைக்குள் அரிக்கன் லாம்பு மினுங்கிக் கொண்டிருந்தது.

'அம்...மா..'

கைகளை ஊன்றி எழுந்து பின்பக்கம் போனாள்.

'ஆரது?..'

'கதவை ஒருக்கால் திறவுங்கோ.. சொல்லுறம்...'

மனதுக்குள் அச்ச உணர்வு சுரந்தது. கை கால்களில் மெதுவாக நடுக்கம் பரவ ஆரம்பித்தது.

வெளியே நின்றவர்கள் புரிந்துகொண்டார்கள் போலும்.

'பயப்பிடாதைங்கோ அம்மா... கதவைத் திறவுங்கோ உங்கட பிள்ளையள்தான் வந்திருக்கிறம்...'

நெஞ்சுக்குள் குளிர் பரவ ... மெல்ல கதவை நீக்கினாள்.

'ஆர் .. மயூரனே...'

'இல்லையம்மா... நாங்கள் செட்டியும் குமணனும்..'

'என்ன தம்பியவை?..'

'குமணனுக்கு சரியான காய்ச்சல்... பனடோலும் குடிக்கிற தண்ணியும் தாருங்கோ'

இருளில் தட்டுத் தடவி ... உள்ளேபோய் பனடோலும் தண்ணியும் எடுத்துவந்தாள்.

மடக் மடக்கென்று செம்புத் தண்ணி முழுவதையும் ஒருவனே குடித்து முடித்தான்.

'நாங்கள் நிண்ட இடம் காலமை துவக்கம் 'றவுண்டப்' ஒருமாதிரிச் சுழிச்சுப்போட்டு வந்திட்டம்..' .... .... ....'

'என்னம்மா பயமாக் கிடக்கே..... ஒருமாதிரியாய் பேசாம நிக்கிறியள்...'

'ச்சா....' என்றாள். ஆனால் உள்மனம் லேசாக நடுங்கியது. பிள்ளைகளைத் திரும்பிப் பார்த்தாள். இருவரும் ஆழ்ந்த நித்திரையில் கிடந்தார்கள்.

அந்த அதிகாரியின் அகோரத் தோற்றம் ஒருமுறை நெஞ்சில் வந்து நிழலாடியது.

'காலமை துவக்கம் ஒண்டும் சாப்பிடவுமில்லையம்மா....' நெஞ்சின் ஆழத்தில் எதுவோ குத்தியது போன்ற வலியை அவள் உணர்ந்தாள்.

'உள்ளுக்கு வாங்கோ... புட்டு இருக்கு... சாப்பிடலாம்...' கதவை அகலத் திறந்தாள்.

குளிர்ந்த காற்று சில்லென்று அவள் முகத்தில் தொற்றியது.

அந்த இருவரும் உள்ளே வந்தார்கள்.

இருளில் துரிதமாக அவளது கைகள் இயங்கின.

எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கும் பெண் என்பதைவிட ... தான் ஒரு அன்பான... உணர்வுமிக்க தாய் என்கின்ற பெருமிதத்தை அவன் முகம் பிரதிபலிப்பது போலிருந்தது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கெட்டிக்காரியின் பொய்யும் புரட்டும் எட்டு நாளையில் தெரிந்துபோகும்!

அரசியல் களமென்பதே, வார்த்தை ஜாலங்களாலும் வாய்வீரங்களாலும் நிறைந்து மலிந்து நாற்றமெடுக்கின்ற சாக்கடையாகிவிட்டது என்றுதான் சிங்கள மக்கள் தற்போது உணரத் தலைப்படுவர்.

கடந்த வாரத்தில் சிங்களத்தின் அரசியல் அரங்கில், பல விசித்திரமான காட்சிகள் அரங்கேறின. மக்களின் பாதுகாப்பு நலனுக்காக என்று கூறிக்கொண்டு சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா, நாடுதழுவிய அவசரகாலச் சட்டத்தை அறிவித்தார். மறுநாள் அவசரகாலச் சட்டம் தந்த அதிகாரத்தின் துணையுடன், இம்மாதம் 28ம் திகதி நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த ஐந்து மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போடுவதாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு மாத்திரமே தற்போது வெளிவந்துள்ளதேயன்றி, இத்தேர்தல் அவசரகாலச்சட்டத்தின் துணையுடன் பிற்போடப்படும் என, அரசியல் அவதானிகளும் செய்தியாளர்களும் கதியாகிவிடும் என்ற தவிப்பில் ரத்வத்தை. யுத்தத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் ரத்வத்தை ஒருபுறமும், யுத்தத்தை விரும்பி நடத்தியபோதும் சனநாயக நல்லபிள்ளை வேடம் போட்டாகவேண்டிய நிலையில் சந்திரிகா மறுபுறமும். ஏற்கெனவே உள்ளுக்குள் நிலவிவந்த கதிரைச் சண்டைகளுடன், இந்தச் சிறிய முரண்பாடும் சேர்ந்து உள்ளுக்குள் முகாம்பிரித்து மோதிக்கொள்ளும் நிலைக்கு வளர்ந்தது. தன் தனிப்பட்டவிருப்பில், அமைச்சரவையில் சேர்த்த அமைச்சர் பீரிசைக்கூட ரத்வத்தையுடன் சேர்ந்து செயற் படுகின்றார் என்ற காரணத்திற்காக, சதிகாரன் என்று ஆத்திரம் தலைக்கேற சந்திரிகா திட்டித்தீர்க்கும் நிலைக்கு நிலைமை சென்றது.

என்றாலும், தேர்தலைவிட யுத்தமே முக்கியமானது என்பதில் அவர்கள் தமக்கிடையே ஒத்தகருத்தைக் கொண்டிருப்பதால் விசயம் இலகுவாக தீர்க்கப்பட்டிருக்கின்றது. யுத்தத்தை

**அவசரகாலச்சட்டம் நீக்கப்படும், அதனைப் பாவித்து தேர்தல் பிற்போடுவது என்பது எமது ஆட்சியில் நடக்கவே நடக்காது என, ஐக்கியதேசியக் கட்சியின் 17வருடகால ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அம்மையார் சந்திரிகா அன்று முழங்கினார்.**

ஏற்கெனவே எதிர்வு கூறியிருந்தனர். தேர்தலைப் பிற்போடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை சந்திரிகா கோரியிருந்ததும், இந்தச் சந்தர்ப்பத்தை சாட்டாக வைத்து, மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடச் சம்மதிக்கின்றோம் ஆனால் சனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தவேண்டும் எனக் கூறி, ஐக்கிய தேசியக்கட்சி அடிமடியில் கைவைத்ததும், ஆளைவிட்டால் போதும் என சுதாகரித்துக்கொண்ட சந்திரிகா, மாகாணசபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதாகவும் அறிவித்திருந்ததும் கடந்த சில வாரங்களின் முன்னால் நடந்த நிகழ்வுகள்.

இந்தத் தேர்தல் விவகாரம், சந்திரிகா முகாமில் ஒருவிதமான சலசலப்பை முறுகல்நிலையை ஏற்படுத்தியது என்றெல்லாம் செய்திகள் வெளிவந்தன. தொலைந்த பிள்ளை தாயைத்தேடி அழுவது போன்று ஜெயசிக்குறு வழிதெரியாமல் திக்கித் திணறிக் கொண்டிருக்கும் இந்நிலையில், தேர்தலை நடத்தினால் தோல்வி நிச்சயம் என்பது சந்திரிகாவிற்கும் நன்கு தெரியும். ஆனால் நல்லபிள்ளை வேடம் போட்டாகவேண்டும் என்றவகையில் ஒரு நிலையெடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் சந்திரிகா. அதேவேளை, தேர்தலுக்காக இராணுவத்தினரின் ஒருபகுதியை மீளப்பெற்றால் ஜெயசிக் குறுவின் தலைவிதி அந்தோ மரண

வெறுத்து கதைகள் சொல்லும் பேராசிரியர் அமைச்சர் பீரிஸ், இப்பொழுது தேர்தலைவிட யுத்தம் முக்கியமானது என்ற நிலைக்கு வந்துள்ளார். இரண்டையும் சம காலத்தில் செய்யமுடியாதெனத் தெரி விக்கும் அமைச்சர் பீரிஸ், யுத்தத்திற்கு

**- சுப்பு -**

முதலிடம் கொடுக்கின்றார்.

ரத்வத்தையின் புதிய காலக்கெடுவை, பீரிஸ் உள்ளிட்ட அவரது சகாக்கள் நம்புகின்றனர். இவ்வருட இறுதிக்குள் ஜெயசிக்குறா நடவடிக்கை முற்றுப் பெறும் எனவும், உரிய இலக்கை அது அடைந்தவிடும் எனவும், ரத்வத்தை தெரிவிப்பதை, இந்த புத்திஜீவிகள் ஆவலுடன் கேட்கின்றனர். கூடவே நம்பவும் செய்கின்றனர்.

யுத்தத்தின்பெறுபேறு, அதாவது ஜெயசிக்குறுவின் பெறுபேறு (அவர்களைப் பொறுத்தவரை) இந்தவருட இறுதிக்குள் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருந்தால், இந்தவருட இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது குறித்து மற்றைய கட்சிகளுடனும் பேசுவோம் என்கின்றார் அமைச்சர் பீரிஸ்.

தேர்தலைப் பிற்போட, சர்வவல்லமை பொருந்திய சனாதிபதிப் பதவியின் அதிகாரத்தை பாவித்த அரசாங்கம், தேர்தலை நடத்துவது குறித்து ஏனைய கட்சிகளுடன் எதற்காகப் பேசவேண்டும் என, சிங்கள மக்கள் குழம்பிக்கொள்ளலாம்.

ஆனால், அமைச்சர் பீரிஸ் இதற்கும் ஒரு அழகான விடையை உதிர்த் திருக்கின்றார்.

தேர்தலைப் பிற்போடுவதற்காக அவசரகாலச் சட்டத்தை பிரயோகித்ததாக ஒத்துக்கொள்ளும் அவர், தேர்தலைப் பிற்போடுவதற்கு சனநாயகத்தில் இது சிறந்தவழி என்றும் கூறியிருக்கின்றார்.

சந்திரிகா அரசின் ஒவ்வொரு ஆண்டுச் சாதனையும், மெல்ல மெல்ல ஒரு சர்வாதிகாரியின் ஆட்சியை நோக்கி அது சென்றுகொண்டிருப்பதை அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டு கின்றது.

இந்த 98ம் ஆண்டில் நின்று கொண்டு, 94ம் ஆண்டை பார்க்கின்ற மக்களிற்கு எல்லாமே பெரும் குழப்பமாக இருக்கும். மயக்கம் நிறைந்த கனவுகாண்பது போன்றே மக்கள் உணர்வர்.

1994ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது சந்திரிகா உதித்த ஒவ்வொன்றும், இன்று முரட்டுத்தனமாக மீறப்பட்டிருக்கின்றன. அதற்கு ஒவ்வொரு புதிய விளக்கங்களுடன், இராணுவ இயந்திரத்தின் துணையுடன் சந்திரிகா தலைமையிலான அரசு அதனை துணிவுடன் மேற் கொள்ளுகின்றது.

ஜே. ஆர். ஜெயவர்தனாவால் உருவாக்கப்பட்ட சர்வ வல்லமை பொருந்திய சனாதிபதிப் பதவியை சர்வாதிகாரியின் அதிகாரங்களை கொண்டிருப்பதாக விமர்சித்த சந்திரிகா, தமது கட்சி ஆட்சிக்குவந்த ஒருவருடத்தில், சனாதிப்தி என்ற தனிமனித அதிகாரம் பறிக்கப்பட்டு, பாராளுமன்ற சனநாயகம் மீட்கப்படும் என உறுதி மொழிந்திருந்தார். ஆனால் அதே சர்வவல்லமை பொருந்திய சனாதிபதி என்ற பதவியை கடந்த நான்கு வருடங்களாக பேணும் சந்திரிகா அந்த பதவிதந்த அதிகாரத்தின் துணையுடன், நினைத்ததை நடத்தி முடிக்கின்றார்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்படும், அதனைப் பாவித்து தேர்தல் பிற்போடுவது என்பது எமது ஆட்சியில் நடக்கவே நடக்காது என, ஐக்கியதேசியக் கட்சியின் 17வருடகால ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அம்மையார் சந்திரிகா அன்று முழங்கினார்.

ஆனால், போராட்டம் நடத்திய சிங்கள தபால் ஊழியர்களைச் சிறையில் தள்ள இதே அவசரகாலச் சட்டத்தைப் பாவித்த சந்திரிகா இன்று, தேர்தலையே பிற்போட்டு தன்னையும் தன் அரசையும் தற்காலிகமாகக் காத்துக்கொண்டுள்ளார்.

பத்திரிகைத் தணிக்கையை கடுமையாகச் சாடி, பத்திரிகைச் சதந்திரத்தை தனது அரசு பாதுகாக்கும் என அன்று தெரிவித்த சந்திரிகா, இன்று இராணுவச் செய்தித் தணிக்கையைப் பிறப்பித்துள்ளார். தணிக்கை அதிகாரியாக இராணுவ அதிகாரியை நியமித்து, தனது இயல்புநிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

செய்தித் தணிக்கையை அறிவித்த தோடல்லாமல், அதை நியாயப்படுத்தி கதைகள் கூறவும் ஆரம்பித்துள்ளார்.

இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தின்போது பிரித்தானியப் பிரதமர் வின்சன் சச்சில், தகவல்துறை அமைச்சகத்தை தன்வசம் எடுத்துக் கொண்டதையும், இராணுவச் செய்திகளுக்கு முற்றாகத் தடைவிதித்ததையும் சந்திரிகா அம்மையார் செய்தியாளர்களுக்கு கடந்தவாரம் கூறி வரலாற்றை நினைவுபடுத்தியுள்ளார்.



ஜெயசிக்குறு என்பதும், தமிழ் மக்களுக்கு எதிரான சமாதானத்துக்கான போர் என்பதும் உலக மகாயுத்தத்தின் நிலையை அடைந்துள்ளதா என்று, எந்தக்குறும்புக்கார செய்தியாளரும் கேட்டுவைக்கவில்லை. அப்படியாரும் கேட்காததற்கு கொலைப் பயமுறுத்தலுக்கு அல்லது கைதுகளுக்கு ஆளாக நேரும் என்ற பயம் காரணமாக இருக்கலாம்.

தமிழ்மக்கள் சம்பந்தமாக சந்திரிகா அம்மையார் அன்று தெரிவித்த கருத்துக்களும், இன்றைய நடை முறைகளைப் பற்றியும் சொல்ல வேண்டியதல்ல. அவை மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளிகள். சிறைக்கொடுமைக்குள் இருந்தபடி சுதந்திரமாகப் பறப்பதுபோன்ற மகிச்சிகரமான அற்புதக்கனவுகளைக் காண் பதற்கு ஒப்பானவை. பலநாள்பட்டினி வயிற்றுடன் இருந்துகொண்டு அறுசுவைப் படையலை அள்ளி உண்பதுபோல பிரமைகொள்வது போன்றது. ★

**தேர்தலைவிட யுத்தமே முக்கியமானது என்பதில் அவர்கள் தமக்கிடையே ஒத்தகருத்தைக் கொண்டிருப்பதால் விசயம் இலகுவாக தீர்க்கப்பட்டிருக்கின்றது. யுத்தத்தை வெறுத்து கதைகள் சொல்லும் பேராசிரியர் அமைச்சர் பீரிஸ், இப்பொழுது தேர்தலைவிட யுத்தம் முக்கியமானது என்ற நிலைக்கு வந்துள்ளார்.**

# முதலாம் பாகம்

## அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

அவர்கள் குழுவில் பல திருமணங்கள் நடைபெற்று மீட்பாளர் குழுவின் புதிய அங்கத்தவர்களான மூன்று குழந்தைகள் ஏற்கனவே பிறந்திருந்தனர். றுத்தின் குழந்தை இவர்கள் எல்லோரையும் விடச் சிறப்பானதாக இருக்கப் போகிறது. அந் நிகழ்ச்சியும் மகிழ்ச்சியானதாக இருக்கும். ஏனெனில், தாம் இன்னொரு குதிரை கண்டுபிடித்திருப்பதாகவும் அவன் சொன்னான். டொவ்வின் நடுக்கம் இப்போது நின்றிருந்தது. படிக்கட்டின் உச்சத்தை அடைந்தபோது, டொவ் தனது சகோதரனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன் அண்ணா" என்றான்.

கதவைத் திறந்த அக்கணமே, றெபேக்காவின் முகம் இருந்த விதத்தில் இருந்தே ஏதோ விபரீதம் விளைந்திருக்கின்றது என்று தெரிந்துவிட்டது. தெளிவாகப் பேசக்கூடிய நிலைக்கு அவளை ஆசுவாசப்படுத்தியதும் அவள், "அம்மாவும் றுத்தும்......அவர்கள் தொழிற்சாலையில் இருந்து வெளியே இழுத்தெடுக்கப்பட்டு...... அவர்களுடைய தொழில் அனுமதிச் சீட்டுக்கள் ரத்துச் செய்யப்பட்டு, உம்சாக் பிளாட்ஸ் கொண்டு போய்விட்டார்கள்" என்றாள் அழுதபடியே.

டொவ் விரைவாகக் கதவு நோக்கித் திரும்பினான். மண்டெக் அவனைப் பிடித்துக் கொண்டான். அவனோ கூக்குரலிட்டுக் கொண்டு கைகளையும், கால்களையும் உதைத்துக் கொண்டான்.

"டொவ்....டொவ்.... நாங்கள் செய்யக்கூடியது எதுவுமில்லை."

"அம்மா.... அம்மா....நான் அம்மாவிடம் போகப் போகிறேன்"

"டொவ்....டொவ் அவளைக் கூட்டிக் கொண்டு போவதை எங்களால் பார்க்க முடியாது"

எட்டு மாதக் கர்ப்பிணியாயிருந்த றுத், அவளுக்காகக் காத்திருந்த ரெப்லிங்காவின் விசவாயுக் கூடங்களை ஏமாற்றிவிட்டாள். அவள் அளவுக்கு மீறி ஆட்கள் அடையப்பட்டிருந்த கால் நடைகளுக்கான பெட்டியொன்றின் நெரிசலிலே கீழே உட்காரக் கூட முடியாத நிலையிலேயே, பிரசவ வேதனையில் உயிரை விட்டாள். அவளது குழந்தையும் அவளோடு இறந்து போனது.

*அவளும் இன்னும் முப்பது பேரும், கசைகள், குண்டாந்தடிகள், நாய்கள் போன்றவற்றால் விரட்டப்பட்டு கால்நடைகளுக்கான பெட்டியிலிருந்து இறக்கப்பட்டுக் காத்துக் கொண்டிருந்த வண்டிகளில் பலவந்தமாக ஏற்றப்பட்டு தலைகளுக்கு மேல் கைகளை வைத்துக் கொண்டிருக்கச் செய்யப்பட்டார்கள். ஆகக்கூடிய ஆட்கள் ஏற்றப்பட்டதும், இரும்புக் கதவுகள் மூடப்பட்டன. வண்டிகள் ஓட ஆரம்பித்துச் சில வினாடிகளில் உள்ளே காபன் மொனொக்சைட் (Carbon Monoxide)- ஒரு விச வாயு) வாயு நிரம்பியது. ரெப்லிங்காவின் வாசலூடாக உள்ளே வாகனங்கள் நுழைய முன்னரே உள்ளேயிருந்த எல்லோரும் உயிரை விட்டிருந்தனர். அந்த வண்டிகள் வெட்டப்பட்டிருந்த பெரிய புதைகுழிகளருகே சென்று நின்றன. அங்கே சடலங்கள் அவர்கள் வாயிலிருந்து தங்கப் பற்கள் அகற்றியபின் இறக்கப்பட்டன.*

ரெப்லிங்காவிலோ எஸ்.எஸ். கேணல் வேர்த் மிகக் கோபமாயிருந்தான். பிரதான விசவாயு கூட இயந்திரங்களில், வார்சோவிலிருந்து இன்னும் ஒரு புகையிரதத் தொடர் நிறைய யூதர்கள் வந்து கொண்டிருக்கும் இவ் வேளையில், பிழையேற்பட்டிருந்தது. போலந்திலிருந்த எல்லா முகாம்களிலும், ரெட்லிங்காவிலிருந்த தனது முகாமே சீராக, திறமையாக "விசேட சிகிச்சை" அளித்தலை மேற்கொண்டிருப்பதாக அவன் பெருமை கொண்டிருந்தான். வார்சோவில் இருந்து வரும் புகையிரதம் வருவதற்கு முன் இயந்திரங்களை இயக்கக் கூடிய நிலைக்குக் கொண்டு வர முடியாதென அவனது பொறியியலாளர்கள் அறிவித்திருந்தனர்.



விடயங்களை மேலும் மோசமாக்கும் விதத்தில், எஸ்.எஸ். கேணல் ஈச்மனும், கிம்லரும் தாமே நேரடிப் பரிசோதனைக்காக வரவிருந்தார்கள். அவர்களைக் கௌரவிக்க விசேட விசவாயு ஊட்டல்களை நடாத்த வேர்த் திட்டமிட்டிருந்தான்.

அவன் தன் பிரதேசத்தில் காணப்பட்ட பழைய, பாவிப்புக்குத் தகுதியற்ற வாகனங்களை எடுத்துப் புகையிரதத் தொடரைச் சந்திக்க புகையிரதப் பாதையருகே அனுப்பியிருந்தான். இந்த வாகனங்களில் வழக்கமாக 20 பேர் வரையிலேயே ஏற்றிச் செல்ல முடியும். ஆனால், அவசர காலமானதால், பலிக்கடாக்களாக வந்திருந்த அவர்களைத் தலைக்கு மேல் கைகளை வைக்கப் பண்ணி நிற்பாட்டுவதன் மூலம் மேலும் ஆறு அல்லது எட்டு யூதர்கட்கு இடம் கண்டுகொண்டார்கள். அப்படியும் தலைகளுக்கு மேல் சில அங்குலங்கள் மீதம் இருப்பதைக் கண்ட யேர்மனியர்கள், அந்த இடைவெளிகளுக்குள் எட்டு, பத்து சிறுபிள்ளைகளை இறுகச் செலுத்தி விட்டனர்.

# தாயகம் நோக்கிய பயணம்

லியா லண்டவ், றுத்தின் மரணத்தால் துக்கத்தினால் அதிர்ச்சி உற்றநிலையில் இருந்தபோதே, புகையிரதம் ரெப்லிங்காவில் இறங்கும் இடத்தை நெருங்கியது. அவளும் இன்னும் முப்பது பேரும், கசைகள், குண்டாந்தடிகள், நாய்கள் போன்றவற்றால் விரட்டப்பட்டு கால்நடைகளுக்கான பெட்டியிலிருந்து இறக்கப்பட்டுக் காத்துக் கொண்டிருந்த வண்டிகளில் பலவந்தமாக ஏற்றப்பட்டு தலைகளுக்கு மேல் கைகளை வைத்துக் கொண்டிருக்கச் செய்யப்பட்டார்கள்.

ஆகக்கூடிய ஆட்கள் ஏற்றப்பட்டதும், இரும்புக் கதவுகள் மூடப்பட்டன. வண்டிகள் ஓட ஆரம்பித்துச் சில வினாடிகளில் உள்ளே காபன் மொனொக்சைட் (Carbon Monoxide)- ஒரு விச வாயு) வாயு நிரம்பியது. ரெப்லிங்காவின் வாசலூடாக உள்ளே வாகனங்கள் நுழைய முன்னரே உள்ளேயிருந்த எல்லோரும் உயிரை விட்டிருந்தனர். அந்த வண்டிகள் வெட்டப்பட்டிருந்த பெரிய புதைகுழிகளருகே சென்று நின்றன. அங்கே சடலங்கள் அவர்கள் வாயிலிருந்து தங்கப் பற்கள் அகற்றியபின் இறக்கப்பட்டன.

லியா ஆகக் குறைந்தளவிலாவது இந்த விடயத்தில் யேர்மனியர்களை ஏமாற்றியிருந்தாள். அவளுடைய தங்கப் பல் வெகுகாலத்துக்கு முதலே கழற்றப்பட்டு, உணவுக்காகப் பண்டமாற்றுச் செய்திருந்தாள்.

முன்பனிக்காலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அத்தோடு, யேர்மனியர்களின் சுற்றிவளைப்புகளும் அதிகரித்துக் கொண்டிருந்தன. முழு யூத சேரியில் இருந்தவர்களும் நில மட்டத்துக்குக் கீழான அறைகளுக்குள் வாசஞ் செய்யத் தொடங்கினர். பெறுமதிமிக்க எல்லாவற்றையும் தங்களுடன் கீழேயே வைத்துக் கொண்டனர். சில நிலவறைகள் 'மீட்பாளர் குழு'வினரது போன்று விரிவான காப்பரண்களாக மாறின. முதலில் டசின் கணக்கில் உருவாகிய இக் காப்பரண்கள் பின்பு நூற்றுக் கணக்காக மாறின. மெல்ல மெல்ல இவைகளை இணைக்கும் நிலத்துக்குக் கீழான சுரங்க வழிகளும் உருவாகின. யேர்மனியர்கள், போலந்து நீல உடைப் பொலிசார், லித்துவேனியர்கள் ஆகியோரது ரெப்லிங்காவிற்கான சுற்றிவளைப்புகளில் அகப்படுவோர் தொகை குறைந்து கொண்டே போனது. யேர்மனியர் சினமடைந்தனர். காப்பரண்கள் நன்றாக உருமறைக்கப் பட்டிருந்ததால் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமான காரியமாயிற்று. கடைசியாக, வார்சோவின் ஆணை அதிகாரி தானே சேரிக்குள் காலடி எடுத்து வைத்து யூத கவுன்சில் தலைவருடன் பேசினான். "நேர்மையான மறைப்பு" என்பதிலிருந்து தப்பி ஒளித்துக் கொண்டிருக்கும் கோழைகளைக் கண்டுபிடித்து யேர்மனியர்களின் மீள்குடியமர்த்தல் திட்டத்தை விரைவுபடுத்த உதவும்படி கோபத்தோடும், அதிகாரத்தோடும் கேட்டான். கடந்த மூன்று வருடங்களாகவே, யேர்மனிய ஆணைகளைச் செயல்படுத்துவதற்கும், அவைகளிலிருந்து, தம் மக்களைக் காப்பதற்கும் இடையில் யூத கவுன்சில் அல்லாடிக் கொண்டிருந்தது. இப்போது இப்படியான யேர்மன் அதிகாரத்தோடு உதவிக்குக் கேட்டதைத் தொடர்ந்து, கவுன்சில் தலைவர் தற்கொலை செய்து கொண்டார். ★

**லியோன் யூரிஸ்**

**தொடரும்...**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்நத கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை **04 - 09 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# தமிழர் தலைகள் நிமிரும்......

**கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:**

**'Kalathil',**

**Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

தமிழீழ மக்களின் இன்றைய பிரச்சினை அவர்களின் **பாதுகாப்பு**. அவர்களின் பாதுகாப்புக்கு இருக்கும் **ஒரேயொரு அச்சுறுத்தல்** சிறிலங்கா என்னும் அந்நிய அரசின் **ஆயுதப்படைகள்**.

இந்த ஆயுதப்படைப் பிரயோகம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தினால் தோன்றிய பாதுகாப்பு முயற்சியாக சிறிலங்காவால் பிரச்சாரப்படுத்தப்படுகிறது. ஆனால், இலங்கைத் தீவின் சமகால வரலாறு தெரிந்த அனைவருக்கும் தமிழ் மக்களது அரசியல் பணிவை பெறுவதற்கான பொறிமுறையாக

ஆயுதப் படைப் பிரயோகம் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டதினாலேயே அந்த ஆயுத ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் **தங்களின் பாதுகாப்புக்காக** தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் தாம் உயிர்வாழ்தலுக்கான பொறிமுறையாக தமது ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்தினர் என்ற உண்மை தெட்டத் தெளிவாக விளங்கும்.

வேறுவிதமாக சொல்வதானால் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் இயக்கம் இருக்கின்ற ஒரு அரசியல் முறைமைக்குள் பகிர்வுகளை விரிவுகளை ஏற்படுத்தி பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையைப் பெருக்கவோ அல்லது மந்திரி பதவிகளின் தொகைகளைப் பெருக்கவோ உருவான அரசியல் இயக்கமல்ல. தமிழ் **மக்களின் பாதுகாப்புக்கு** - அவர்களது தமிழீழத் தேசம் மீள அமைக்கப்படுவதே ஒரேவழி என்பதை காலனித்துவ விலகலின் பின் உள்ள நவகாலனித்துவ வரலாற்றால் அனுபவ பூர்வமாக உணர்ந்த தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கத் தமிழீழ மக்களே உருவாக்கிய தேசிய விடுதலை இயக்கம்.

இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தின் தலைவியாகிய சந்திரிகாவும் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் - ஆயுத ஒடுக்கு முறைகளே தமிழ் மக்களை **அவர்களின் பாதுகாப்புக்காக** ஆயுதமேந்திப் போராட வைத்தது என உண்மை பேசியே மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைத்தார் என்பதற்கு இலங்கைத் தீவின் தேர்தல் வரலாறு தெட்டத் தெளிவாகச் சான்று பகர்ந்து நிற்கிறது.

ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற சந்திரிகா ஆயுதப்படைப் பிரயோகத்தின் தேவையில் புதியதோர் மாற்றத்தைப் புகுத்தினார். தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட பிரதேசங்களாக உலக அங்கீகாரத்தை மட்டும் எதிர்பார்க்கும் நிலையில் கருவாகி நின்ற தமிழீழத் தேசத்தினை ஆக்கிரமித்து மீண்டும் சிறிலங்காவின் இறைமையை அதன் மீது நிலைநாட்டுவதற்கான பொறிமுறையாக ஆயுதப் படைகளின் பிரயோகத்தைக் கையாண்டார். இதற்கான சர்வதேச அரசியல் சூழ்நிலைகளை உருவாக்கும் அரசியல் செயற்பாடாக சமாதான பேச்சுவார்த்தை நாடகத்தை அரங்கேற்றினார். இந்நிலையில் **மக்களின் நாளாந்தப் பாதுகாப்பு** என்பது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டதும் தன் சதித்திட்டத்தின் நோக்கு நிறைவேறாது எனக் கண்டுகொண்டு தமிழ் மக்களின் யாழ்ப்பாணக் குடாநாடு மீதான ஈவிரக்கமற்ற கொடிய யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டார். ஆயினும் மக்களின் பாதுகாப்பு என்ற நோக்கை தனது இராணுவ நோக்காக வெளிப்படுத்திடும் தந்திரோபாய முயற்சியில் தனது ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு சமாதானத்திற்கான யுத்தம் என்ற கோசத்தை சந்திரிகா சர்வதேசப் பிரச்சாரமாக்கினார்.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தடுத்து அவர்களது - தங்களைத் தாங்களே பாதுகாப்பதற்கான பொருளாதாரச் சக்தியையும் மனோவலிமையையும் அழிப்பதன் மூலம், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இல்லாது செய்து, ஆயுத அச்சுறுத்தல் மூலம் தான் திணிக்கும் தீர்வுகளுக்கு தமிழர்களின் அரசியல் பணிவைப் பெறுதல், என்னும் சிறிலங்கா அந்நிய அரசாங்கத்தின் அரசியல் ஒடுக்குமுறைச் செயற்திட்டத்தின் முதுகெலும்பாக ஆயுதப்படைகளின் ஆக்கிரமிப்பு உள்ளன. ஆதலால், இந்த ஆயுதப் படைகள் தமிழ் மக்கள் மேல் மேற்கொள்ளும் தனிப்பட்ட கூட்டு அழிவுகள் அனைத்தும் சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை தனது இலக்கை ஏதோ ஒரு வகையில் எய்தும் போக்காக கருதப்பட்டு தனது படைகளது தமிழ் மக்கள் மீதான குற்றச் செயல்களுக்கு உரிய நீதி வழங்கப்படாது குற்றவாளிகள் தப்பிப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக்கப்பட்டன. நவாலித் தேவாலய அகதிகள் படுகொலைகள் - நாகர் கோவில் பள்ளி மாணவர் இனக் கொலைகள் போன்ற பல பகிரங்கமான சிறிலங்காப் படைகளின் இன அழிப்புக்களில் சந்திரிகாவே நேரடியாகத் தன்படைகளைத் தட்டிக் கொடுத்த கீழ்த்தரமான செயல்களை உலகு அறியும். இதனால் காணமல் போதல் - பாலியல் வன்முறைகள் - இனக் கொலைகள் எனப் பல்வேறு வகையான குற்றச் செயல்கள் பொதுவாக சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு பிரதேசமெங்கும் குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் பெருமளவில் அதிகரித்தன. இதனால் தமிழ் **மக்களின் பாதுகாப்பு** பகிரங்கமாக அழிக்கப்பட்டு வருகிறது.

இவற்றை மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் இனங் காட்டியதும் கண்துடைப்பு முயற்சியாக கிரிசாந்தி வழக்கில் மரண தண்டனை வழங்கி தனது அரசாங்கமும் தமிழர்களுக்கு நீதி வழங்க முற்படுவதாக சந்திரிகா காட்ட முனைந்தார். ஆயினும் அவ்வழக்கு மரணப்படுகுழிகளில் 400 க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட கொடுமைகளுக்கான சான்றுகளை வெளிப்படுத்தி எதிர்பாராத விளைவைச் சந்திரிகா அரசாங்கத்திற்கு ஏற்படுத்தி விட்டது. ஆயினும், சர்வதேச சட்டங்களைப் பற்றி என்றுமே அக்கறை காட்டாத சந்திரிகா அரசாங்கம் அந்த மரணக்குழிகள் குறித்த விசாரணைகளை நடத்தவோ அல்லது அக்குற்றச் செயல்களை வெளிப்படுத்தக் கூடிய தடயங்களைப் பேணவோ மறுத்து வருகிறது. இது தமிழ் **மக்களின் பாதுகாப்பு** மேலான சிறிலங்காவின் அலட்சியத்தை மேலும் உலகிற்கு உறுதியாக்கி உள்ளது.

இந்நிலையில் தமிழ் **மக்களின் பாதுகாப்பு** முற்றுமுழுதாக தமிழீழ விடுதலைப் புலிகளாலேயே பேணப்படுகிறது என்ற பேருண்மை உலகிற்குத் தெட்டத் தெளிவாகியுள்ளது. ஆகையினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்களைப் பாதுகாக்கும் ஆற்றலைப் பலப்படுத்துவதினால் மட்டுமே தமிழ் **மக்களின் பாதுகாப்பு** பேணப்பட்டு அவர்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெறுவர் என்பது தெளிவான உண்மையாக உள்ளது. இதனை சர்வதேச சமூகத்திற்கு எடுத்து உரைத்து அவர்களை நெறிப்படுத்தும் தமிழீழத் தேசத் தூதுவர்களாக ஒவ்வொரு புலம்பெயர் தமிழீழ மக்களும் விளங்குகின்றனர்.

அதேவேளை, தமிழீழ **மக்களின் பாதுகாப்பிற்கு** தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலப்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் செய்யவேண்டிய இல்லங்களாக புலம்பெயர் தமிழ் மக்களின் உள்ளங்கள் மாறவேண்டிய காலகட்டமிது. புலப்பெயர்வின் கஷ்டங்கள் துன்பங்கள் இதற்கு பெருந்தடைகளாக உள்ளன என்பது யாவரும் அறிந்த யதார்த்த உண்மை. ஆயினும், தமிழீழத்தில் இருந்து புலம்பெயர்ந்த அனைவரும் அம்மக்களின் வரிப்பணத்தில் இலவசக்கல்வி கற்று உருவான பின்னரே உயர்வுகளைப் பெற்றவர்கள். இந்த உணர்வு உள்ள ஒவ்வொரு தமிழீழ மக்களும் தங்கடன் தமிழீழத் தேசப்பணியென்ற உணர்வுடன் செயலாற்றுவதினாலேயே பல முன்னேற்றங்களை விடுதலைப் போராட்டம் பெற்று வீறுநடை போடுகின்றது. இதனால், எதிரியான சிறிலங்கா புலம்பெயர் தமிழ் மக்களையும் தனது இராணுவ இலக்காக்கி புலம்பெயர் மக்கள் தங்கள் தாயகத்தின் வளர்ச்சிக்காக - உயர்ச்சிக்காக செய்யும் பணிகளுக்குப் பல்வகையான இடையூறுகளை ஏற்படுத்த முயற்சிகளில் இறங்கி நிற்கிறது. இந்நேரத்தில் இன்னும் அதிகமான மதியும் நிதியும் அளிப்பதை புலம்பெயர் தமிழ் மக்கள் சிறிலங்கா தமக்கு விட்டுள்ள சவாலுக்கான பதிலடியாக கருதி வேகத்துடன் பெரிய அளவில் உதவிவருகின்றனர். இதில் ஒவ்வொரு புலம்பெயர் தமிழீழ மக்களும் உடனடியாக இணைந்து எம் **மக்களின் பாதுகாப்புக்கு** நாம் உதவும் முக்கிய கடமையில் பங்கேற்க வேண்டும்..

அன்பின் ஆசிரியர்.

## தமிழீழ உட்கட்டுமானம்....

செயற்படுத்தலுக்கான திட்டங்களுடன் ஆராய்ந்து தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக இறைமையும் தன்னாட்சியும் கொண்ட தமிழீழத் தேசத்தினை கட்டி எழுப்பும் பணிக்கான திட்டங்களை வகுத்தும் தொகுத்தும் கூறும் இந்நூல், தமிழீழத்தின் தலை சிறந்த அறிவாளிகள் தொழில்நுட்ப வல்லுனர்கள், செய்முறை அனுபவம் உள்ளவர்களை ஒருங்கிணைத்து தயாரிக்கப் பட்டுள்ளது.

சந்திரிகாவால் ஆக்கிரமிப்பின் இராணுவ இலக்காக எங்கள் இனிய தேசத்தின் உட்கட்டுமானங்கள் மாற்றப்பட்டு அவைகள் தேடித்தேடி அழிக்கப்பட்டு வரும் இன்றைய சூழலில், அதற்கேற்ப விடுதலைப் புலிகளின் போராட்ட உத்திகளும் மாற்றப்பட்டு எமது தாய்த்திரு நாட்டின் தேசவளங்கள் உட்கட்டுமானங்கள் பேணப்படும் என்பதற்கு வெளிப்படையான சான்றாக இந்நூல் வெளிவந்துள்ளது. (Nation building Process) என்கிற தேசநிர்மாணப் பணியை தமிழீழ மக்கள் எந்தப் போர்ச் சூழலிலும் தொடர்வார்கள் என்பதற்குச் சான்றாக இதனை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளிக்கொணர்ந்துள்ளது. இந்நூலின் மூலம் தமிழீழத் தேசமென்பது கற்பனாவாதக் கனவு அல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதுமல்லாமல் அத்தேசத்தின் எதிர்காலம், ஆட்சி முறைகள், பொருளாதாரக் கொள்கைகள் எப்படி அமையப் போகிறது என்பதும் விஞ்ஞான பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது. இதுவரை எம்மினிய தாயகத்தின் பேரழகைப் பாடுகின்ற கவிதை நூல்கள் காட்சி நூல்கள் பல கண்டுள்ளோம். எம் மக்களின் வீர வரலாற்றை அவர் படைக்கும் சாதனைகளின் பெருமைகளை எடுத்துரைக்கும் நூல்கள் பல கண்டு இறும்பூதெய்தியுள்ளோம். ஆனால் இன்றோ எங்கள் தாயவள் மேனியின் ஆக்கத்திறன்களை வளங்களை மட்டுமல்ல – வளக்குறைச் சல்களை தேக்கக் காரணிகளைப் பேசுகவல்ல ஆய்வுகளை ஆலோசனைகளை விஞ்ஞான பூர்வமாக எண்ணிப்பார்க்கும் திட்டங்களை வகுத்துக் கூறும் அற்புதமான நூல் ஒன்றைக் காண்கின்றோம். இது ஆய்வுகளின் தொகுப்புத் தான் ஆனால் முடிந்து போன நூல் அல்ல. எங்கள் தேசத்தின் புதிய வாழ்வுக்கான முதல் அத்தியாயம். இதனை தமிழீழத்தாயின் புதல்வர்கள் ஒவ்வொருவரும் படித்து தங்கள் திருப்தியை அதிருப்தியை ஆலோசனைகளை அறிவுரை களை முதலீடுகளை மூலதனங்களை தாய்நாட்டிற்கு வழங்க வேண்டும்.

தேச மக்கள் என்பது ஒரு ஆன்மா, என அச் சொற்றொடரை முதன் முதலில் உருவாக்கிய பிரான்சிய எழுத்தாளரான ரெனனின் கருத்து. இந்தத் தேச இனம் என்னும் ஆன்மா இரண்டு பரிமாணங்களினால் உருவாக்கப்படுகின்றது. ஒன்று இறந்த காலம் மற்றது எதிர்காலம். நாம் வளமான பாரம்பரியம் ஒன்றின் சொந்தக்காரர்கள் என்னும் உணர்வு மற்றது அந்த சிறப்பான பாரம்பரியத்தை பேணி வாழ்வோம் என்னும் உறுதி. முதலாவது சிந்தனை இரண்டாவது இயக்கம். ஒன்று நிலையியல் தன்மையானது. மற்றது இயக்கத்தன்மையானது. வரலாற்றை மாற்றுகின்ற வரலாறு அதுவே பழையதைப் பேணி அதில் உயர்வுகளை ஏற்று குறைகளைக் களைந்து புதிய சமுதாயத்தை ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைப் படைக்கும் வழி. இதனை இந்நூல் செவ்வனே செய்கின்றது. நம்மில் தமிழீழத் தேச மக்கள் நாம் என்ற உணர்வை மீட்டுகின்றது. இது தமிழீழத் தேச மக்கள் எல்லோரையும் இணைக்கும் பாலம். எங்கு வாழ்ந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் தேச நிர்மாணப்பணியில் ஒவ்வொருவரையும் பங்களிக்க வைக்கும் அழைப்பு.

தமிழீழத் தேச நிர்மாணப் பணி இரு பக்கங்களைக் கொண்ட நாணயம். ஒன்று திட்டங்கள். மற்றையது செயற்படுத்தல். முதலாவது மதியளிப்பு. இரண்டாவது நிதியளிப்பு. இரண்டும் இணைந்தாலே அந்நாணயம் பெறுமதியுள்ளமாகும். சிந்தனை செயலாகும். செயல் பலனாகும். ஆதலால் மதியும் நிதியும் அளித்து தேச நிர்மாணப் பணியினை தொடர வேண்டிய பொறுப்பு, எம் தேச மக்கள் போரிலும் வறுமையிலும் வாடுகின்ற இந்நேரத்தில் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நமதாகின்றது. தேச நிர்மாணப்பணியில் நாம் செலவிடும் பணம் நாமே நமக்கிடும் மூலதனம். இம் மூலதனத்தால் விளைகின்ற பயன் எம்மையும் எம் சந்ததியையுமே வந்தடையும். ஆகவே நாம் எம் அன்னையின் உட்கட்டுமானங்களை பெருக்கி உறுதியாக்கி உயர்வாக்கி உன்னதமான எதிர்காலம் ஒன்றை உருவாக்கும் புனித பணியில் இணைவோமாக! ★

www.tamilarangam.net






# நெஞ்சு பொறுக்குமா.

பணம் படைத்தோர் தேசத்தில்
தஞ்சம் புகுந்துவிட்ட எமக்குப்
பஞ்சமில்லா வாழ்க்கை.
நெஞ்சுரம் கொண்டோரங்கே
பஞ்சம் பசி பட்டினியுடன்
வெஞ்சமர் செய்து வெந்து மடிய....
விடுதலை பற்றி நாம் வேடிக்கையாய் பேசினால்...
நெஞ்சு பொறுக்குமா....?

**- கொற்றையூர் வாசன்.**

அஞ்சி அஞ்சித் தமிழர் அவலத்தில் ஆழ்தல் கண்டும்
கஞ்சிக்கே வழியின்றிக் கதிகலங்கி நிற்க வைத்தும்
வஞ்சிகளும் பிஞ்சுகளும் வாழ்விழக்க வைத்தல்கண்டும்
பஞ்சமும் பசியும் பழிவாங்கலும் படுகொலையும்
விஞ்சியிருக்கவைத்து வேடிக்கை பார்த்திருக்கும்
குஞ்சுத்தமிழ்க்குழுக்கள் கோணற் குணங்கண்டு
நெஞ்சுபொறுக்குமா? நெஞ்சுவெடிக்குதே!

**- சின்னையா சிவஞானசுந்தரம் பேர்லின்.**

சூரியக் கதிர்வீச்சால் கொட்டும் மழையில் நனைந்து
இரவோடிரவாக எம்மக்கள் கிளாலியைக் கடந்ததை....
கொக்கட்டிச்சோலைப் படுகொலையை, நாகர்
கோவிலில் பூவோடு பிஞ்சு கருகியதை....
தாயகம் நோக்கி வந்த எங்கள்
காவிய புதல்வரை இந்தியப்பூதம் விழுங்கியதை...
செம்மணியில் ஈழத்துக்கண்மணிகளை கொன்று புதைத்ததை
நெஞ்சுபொறுக்குமா?

**- புங்கையூர் த. மதி சுவிஸ்.**

பிறந்த மண்ணில் நடை பிணங்களாய்
இடம்பெயர்ந்து நடந்த நாட்களில்
சிங்களத்து வெறியரின்
குண்டுமழைக்கும் கொடுமைகளுக்கும்–இரையாக
கால், கைகளை இழந்து–இன்னும்
சொந்த உறவுகளை, ஊர்களை–இழந்து
அகதி முகாம்களில் –மீண்டும்
ஆளும் வர்க்கத்தின் கொடுமையின் மத்தியில்...

**- வவுனிக்குளம் திருமதி உஷா செல்வம் நோர்வே.**

பிஞ்சிலே வாடி வதங்கும் சின்னஞ்சிறு மழலைகள்
பஞ்சத்தால் துடிதுடித்திடும் ஆருயிர்ச் செல்வங்கள்
கஞ்சியூற்றும் கல்வி கலங்கி அலைந்திடும் இளசுகள்
மஞ்சமதில் பொட்டிழந்திடும் மலர் இனங்கள்
பஞ்சடைந்த கண்களுடன் பாட்டன் பாட்டிகள்
நஞ்சடைத்த பந்துசெய்யும் கோர அழிவுகள்
மிஞ்சிவரும் ஈனச் சிங்களத்தின் கொடுமைகள்
நெஞ்சு பொறுக்குமா தமிழன்னைபடும் அவலங்கள்.

**- சம்புகுண்டடம் அகஸ்தீன் யேர்மனி.**

ஆடித் திங்களின் அகன்ற குழிக்குள்
முடங்கிய கூடுகளை எம் நெஞ்சுபொறுக்குமா?
மரணகுழிக்குள் ஒடிந்த சருகுகளை இழக்குமா?
வெண்ணிற சிட்டுக்கள் செந்நிற சேற்றில்
மிதந்ததை மறக்குமா?
விடிவெள்ளிகள் உதிர்ந்து விழுந்ததை மறக்குமா?
சிலுவையில் தொங்கியவன் கருகியதை
மறக்குமா?
இருப்பிழந்து கலைந்தனை நெஞ்சம்
பொறுக்குமா?

**- கரவை கலா யேர்மனி.**

நஞ்சுமாலையோடு ஒரு தம்பி
வஞ்சக படையிலும் உடன்பிறப்பு
பிஞ்சுகள் தின்கின்ற பேய்கூட்டம்
கஞ்சியும் கிட்டாத கோரப் பசி
அஞ்ச வேண்டாமென குரல்கொடு தமிழா!
தஞ்சமாய் நாமுண்டு சொல்லிவிடு
தெளிவாய்
நெஞ்சு நிமிர்த்திடு என் இனமே
பஞ்சாய்ப் பறந்திடும் ஈழத்துன்பம்.

**- கண்ணன் பிரான்ஸ்.**

தஞ்சமது புகுந்தாலும்
பஞ்சுதனில் புரண்டாலும்
பிஞ்சு மொழிக்குஞ்சுகளும்
வஞ்சியர்கள் பலருமங்கே–நய
வஞ்சகர்களின் வன்செயலால்
அஞ்சி, அஞ்சி வாழுவதும்
கஞ்சியின்றி வாடுவதும்
நெஞ்சமது பொறுத்திடுமா?

**- திருமதி ராஜேஸ்வரி லோகநாதன் யேர்மனி.**

செய்தகுற்றமென்ன? தெரியாது ஏங்கிச்
சிறைகளுக்குள் உயிர்துடிக்க நெஞ்சுபொறுக்குமா?
தூக்கிவிட, காத்துவிட எம்மினத்துயர்துடைக்க
வரம்கேட்டு வாசல்வர உதவிக்கை நீட்டாவிடில்...
கிரிசாந்தி, கோணேஸ்...வல்லுறவு வரிகள் நீளவே
நாலு புதை குழிக்காய் நீதிதேவன் விழிக்கவே
நானூறு புதைகுழிச் சரித்திரம் வெளிக்கவே
முன்னூறுநாள் சுமந்தஉதிரம் எரியவே நெஞ்சுபொறுக்குமா?

**- புஸ்பராணி ஜோர்ஜ் யேர்மனி.**